www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை - 6 ஐப்பசி - 1991


# ஈரோஸ் பெயரில் புலிகள் கொழும்பு விரைவு; புலிகளுக்கு மருந்துஅனுப்ப ஜனாதிபதி பணிப்பு;

# புலிகள் பிரேமதாசா கள்ள உறவு அம்பலம்

**எதிர்கட்சிகளும், யூ. என். பி. அதிதிருப்தி ஆதரவாளர்களும் ஜனாதிபதிக்கெதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஆட்டம் கண்டுள்ள பிரேமதாசாவின் கரங்களைப் பலப்படுத்துமுகமாக ஈரோஸ் தோல் போர்த்திய புலிகள் பாராளுமன்றம் செல்ல கொழும்பு சென்றுள்ளனர். இராணுவப் பாதுகாப்புடன் புலிகள் ஐந்துநட்சத்திரக் ஹோட்டலில் தங்கி அரசுடன் யுத்தநிறுத்தம் பேச்சுவார்த்தையென மீண்டும் ஒரு தேனிலவு ஆரம்பமாகிறது.**

பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து, பாராளுமன்ற எம். பிக்களை படுகொலை செய்துவந்த புலிகள் இப்போது ஈரோஸ் வடிவில் தமது பாராளுமன்ற பதவி ஆசையை வெளிப்படுத்தியுள்ளனர். ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை இராஜினாமா செய்யவைத்தும் பின்பு ஈரோஸ் கலைக்கப்பட்டு விட்டதாகவும் அறிவித்த புலிகள் இப்போது பிரேமதாசாவின் கரங்களை பலப்படுத்தவும் தமது தோல்விகளை பேச்சுவார்த்தைகள் என்று கூறி மூடி மறைக்கவும் இழப்புக்களை நிவர்த்தி செய்யவும் வேண்டி பிரேமதாசாவின் கால்களில் சரணாகதி அடைந்துள்ளனர்

கலைக்கப்பட்டு புலிகளுடன் கலக்கப்பட்ட ஈரோஸ் உறுப்பினர்களையும் தமது உறுப்பினர்களையும் கலந்து பாராளுமன்ற ஆசனங்களைநிரப்ப புலிகள் தலைமை அனுப்பியுள்ளது. ஈரோஸ் முன்னாள் வடபகுதி பாராளுமன்ற குழுத்தலைவரும் தற்போதைய புலிகளின் முழுநேர ஊழியருமான எட்வேட் செபஸ்ரியான்பிள்ளை தலைமையில் புலிகள்குழு ஒன்று செஞ்சிலுவைச்சங்க கப்பல்மூலம் திருகோணமலைகொண்டு வரப்பட்டு அங்கிருந்து இராணுவ ஹெலிகொப்டர்மூலம் கொண்டுவரப்பட்டு கொழும்பு இராணுவ தலைமையகத்தில் இறக்கப்பட்டு முன்னாள் உள்ள மெரிடியன் ஐந்துநட்சத்திரக் ஹோட்டலில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புடன் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## பெயர்பட்டியல் சமர்ப்பிப்பு

எட்வேட் செபஸ்ரியாம்பிள்ளை சமர்பித்த பாராளுமன்ற வெற்றிடங்களுக்கான பெயர் பட்டியலில் லண்டன் முன்னாள் புலிப் பொறுப்பாளரான சக்தி எனப்படும் சத்தியமூர்த்தி ஈரோசின் முன்னாள் தலைவரும் தற்போதைய புலிகளின் நிழல் மந்திரி சபையின் மந்திரியுமான பாலகுமார், ஈரோசின் முன்னாள் இராணுவப் பொறுப்பாளரும் தற்போதைய புலிகளின் ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியருமான பாலநடராஜா ஐயர், ஈரோசின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போது புலிகளின் மானிப்பாய் பொறுப்பாளருமான பராஜசிங்கம், ஈரோசின் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் புலிகளின் ஆதரவாளர்களுமான சௌந்தராஜா, முல்லைத்தீவு புலிகளின்குழுத் தலைவர்களில்ஒருவரானசந்திரசேகர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

## பிரேமதாசா ஏற்கமறுப்பு

புலிகள் சமர்ப்பித்த பாராளுமன்றப்பதவிக்கான பெயர்பட்டியலை ஜனாதிபதி பிரேமதாசா ஏற்கமறுத்து விட்டார். ஈரோஸ் என்ற போர்வையில் புலிகளால் இப்பாராளுமன்ற வெற்றிடங்கள் நிரப்பப்படுவதால், புலிகள் என பகிரங்கமாக அடையாளங் காணப்படுபவர்களை ஏற்பதால் ஏற்கனவே பலசங்கடங்களில் மாட்டுப் பட்டு விழிபிதுங்கி நிற்கும் பிரேமதாசாவுக்கு மேலும் பிரச்சனைகள் தோன்றலாம் என்பதாலேயே இப் பெயர்ப்பட்டியலைஏற்க பிரேமதாசா மறுத்ததாய் தெரியவருகிறது.

## புதியபட்டியல் சமர்பிப்பு

இதனைத்தொடர்ந்து புதியவர்களின் பெயர்கொண்ட பட்டியல் ஒன்றை எட்வேட் செபஸ்ரியாம்பிள்ளை சமர்பித்துள்ளார். அப்பட்டியலில் எட்வேட் செபஸ்ரியாம்பிள்ளை, முன்னாள் மாநகர ஆணையாளரும் புலிகளின் தீவிர ஆதரவாளருமான சிவஞானம், முன்னாள் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினருமான கணபதிப்பிள்ளை செல்வநாயகம், புலிகளின் தீவிரஆதரவாளர்களான மயிலிட்டியைச்சேர்ந்த வேலுப்பிள்ளை சிவனடியான்,சுப்பிரமணியம், வைத்திலிங்கம் செல்லத்தம்பி ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளாக யார் வரவேண்டும் என்பதை தீர்மானிக்கும்பொறுப்பை புலிகள் பிரேமதாசாவிடம் மண்டியிட்டு கையளித்துள்ளமை கேலிக்கும் வேதனைக்குமுரிய விடயமாகும்.

## எட்வேட் -பிரேமதாசாசந்திப்பு

எட்வேட் செபஸ்ரியாம்பிள்ளை, சத்தியமூர்த்தி ஆகியஇருவரும் ஜனாதிபதி பிரேமதாசாவை இருதடவைகள் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். ஆனையிறவில் படுதோல்வியையும் முல்லைத்தீவில் பயங்கரஇழப்புகளையும் தமிழ்நாட்டில் பலநெருக்கடிகளையும் சந்தித்து திணறிப்போயுள்ள புலிகள் இச்சந்திப்பில் யுத்தநிறுத்தம் பற்றி பேசியுள்ளனர். இதற்கு நன்றிக் கடனாக பிரேமதாசாவுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் புலிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரேமதாசாவுக்கு ஆதரவாக வாக்களிப்பர் என நம்பப்படுகிறது.

## புலிகளுக்கு மருந்து அனுப்ப பிரேமதாசா பணிப்பு

தனது இக்கட்டான கால கட்டத்தில் கரங்களைப் பலப்படுத்த வந்துள்ள புலிகளுக்கு கைமாறாக ஆனையிறவு - முல்லைத்தீவு மோதல்களில் காயம்பட்ட ஆயிரக்கணக்கான புலிகளுக்கு மருத்துவ சிகிச்சையளிக்க மருந்துகளை உடனே அனுப்புமாறு பிரேமதாசா பணிப்புரை வழங்கியுள்ளார். அதேவேளை புலிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க முல்லைத்தீவு தாக்குதல்களும் ஏனைய இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. இதனால் தெற்கில் மக்கள் மத்தியிலும், இராணுவத்துள்ளும்,ஐக்கியதேசிய கட்சிக்குள்ளும் பலத்தஎதிர்ப்புகள் தோன்றியுள்ளன. இதனைசமாளிக்கவேண்டி வடக்கு கிழக்கில் ஊரடங்குசட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு

# ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவு ஏன்?

ஜனாதிபதி பிரேமதாசா மீது எதிர்கட்சிகள், அரசகட்சி உறுப்பினர்கள் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஈ.பி ஆர். எல். எவ் தனது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது. ஈ.பி.அர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஜனாதிபதிமீதான குற்றச்சாட்டுகளுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏன் ஆதரவு வழங்கியது ?

- இந்தஅரசு,எல். ரி. ரி. ஈ. யுடன் சேர்ந்து 1988ம் ஆண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வட-கிழக்குமாகாண சபையையும், மாகாணஅரசையும் செயற்படாதவாறு தடுத்தது.
- 13வது அரசியல் சாசனத்திற்கு அமைய அதிகாரப்பரவலாக்கல் நிறைவேற்றத்தை தடுத்தது.
- அரசியல் சாசனத்தின் மூலம் தமிழ்பேசும்மக்களுக்கு கிடைத்த உரிமைகளை சாதாரண சட்டங்கள் மூலம் இல்லாதொழித்தது.
- எல்.ரி.ரி.ஈ யைத் திருப்திப்படுத்த வடக்கு-கிழக்கு மாகாண சபையைத் கலைக்கவே ஒருசாதாரண சட்டமூலத்தை நிறைவேற்றி அமுலாக்கியது.
- எல்.ரி.ரி.ஈ யுடன் 1989/90ல் ஓராண்டுக்குமேல் அரசுநடத்திய பேச்சுவார்த்தைகளின்போது அதில் ஏற்பட்ட இணக்கங்களை பாராளுமன்றத்திற்கும் நாட்டுமக்களுக்கும் மறைத்தது.
- எல்.ரி.ரி.ஈ யுடன் பேச்சுவார்த்தைகளின்போது, எல்.ரி.ரி.ஈ. தமிழ் பேசும் மக்கள் மீது தொடுத்த சகல விதமான காட்டுமிராண்டித் தனமானதும் சட்டவிரோதமானதுமான நடவடிக்கைகளையும், அங்கீகரித்து மௌனமாக இருந்து எதிர் நடவடிக்கை எடுக்காமலிருந்தது.
- எல். ரி. ரி. ஈ இற்கு ஆயுதங்கள் வழங்கியமை.
- தேசியமட்டத்தில், சகல ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகச் செயற்பட்டது.
- அன்டை நாடுகளுடன், இருந்துவந்த நேசஉறவுகளைச் சீர்குலைத்தது.
- தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வுகாணும் போக்கை வேண்டுமென்றே இழுத்தடித்தது.

**எமது மக்களுக்கு அமைதி ,சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்**

படிப்பகம்

www.padippakam.com



## எமது பார்வையில்

பிரேமதாசாவின் தலைமையிலான ஸ்ரீலங்காஅரசு தமிழ் பேசும்மக்கள் மீது மிகமோசமான ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து வந்துள்ளது. தமிழ் பேசும்மக்களின் வரலாற்றிலேயே இல்லாத மிகமோசமான ஒருயுத்தத்தை எம்மக்கள்மீது திணித்த பிரேமதாசாவின்அரசு, எம்மக்களுக்கு ஏற்படுத்திய உயிர் உடமை இழப்புக்கள் எண்ணுக்கணக்கற்றவை. சர்வஅதிகாரங்களையும் தன்னகத்தே வைத்திருக்கும் பிரேமதாசா இனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக எந்தமுயற்சிகளையும் எடுக்கவில்லை. மாறாக இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை கூர்மையடையச்செய்து அதிலேதான் குளிர் காய்ந்ததுதான் அவரது அரசியல் சாதனை.

தமிழ்பேசும் மக்களுக்கிருந்த புதிய நம்பிக்கைக்கான இந்திய -ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை சீரழித்த ஸ்ரீலங்கா பேரினவாத அரசு வடக்கு கிழக்கு மாகாண அரசுக்கான அதிகாரங்களை வழங்கமறுத்து,மாறாக புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி வடக்கு கிழக்கு மாகாண அரசின் செயற்பாட்டை சீர்குலைத்தது பிரேமதாசாவின் கைங்கரியமே.

பெருந்தொகையான ஆயுதங்களை புலிகளுக்குவழங்கி, தமது விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் பலநூற்றுக்கணக்கான தமிழ் தேசிய இராணுவ இளைஞர்களை படுகொலைசெய்தமை, இதர அமைப்புக்களைச்சேர்ந்த பலநூற்றுக்கணக்கானோர் புலிகளால் கைதுசெய்யப்பட்டமைக்கு ஆதரவு வழங்கியமை, திரு.அமிர்தலிங்கம், திரு.யோகேஸ்வரன், திரு. சாம்தம்பிமுத்து போன்றவர்களை புலிகள் படுகொலை செய்தமைக்கு பூரண ஆதரவு வழங்கியமை இவைகள் எல்லாமே பிரேமதாசாவின் சிறப்புக்கள்.

வடக்கு கிழக்கில் குண்டுவீச்சுக்களையும் கொலைபாதகத்தாக்குதல்களையும் நடாத்திக்கொண்டு எமதுமக்களை முகாம்களுக்குள்ளும் பங்கர்களுக்குள்ளும் அவலவாழ்க்கைக்குள்தள்ளி, இந்த நூற்றாண்டின் மிகமோசமான திட்டமிட்ட பொருளாதாரத்தடைமூலம் எமது மக்களை வாட்டிவதைக்கும் அதேவேளையில் தெற்கில் பிரேமதாசாவின் கம்உதவா கொண்டாட்டங்களும் களியாட்ட விழாக்களும் இந்தச் சர்வாதிகாரியின் மனஉணர்வுகளை தெளிவாக்குகிறது.

ஜே.வி.பியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் படுகொலை, றிச்சார்ட் டி. சொய்சா போன்ற பத்திரிகையாளர்கள் படுகொலை ஜனநாயகத்துக்காக குரல்கொடுத்தவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட உருட்டல்கள், மிரட்டல்கள் அனைத்துமக்களினதும் குரல்வளைகள் நெரிக்கப்பட்டு நடந்த காட்டுத்தர்பார். இவைதான் புலிகளும் ஈரோசும் புகழ்மாலை சூடிய இந்தச் சாதாரணமனிதன் பிரேமதாசாவின் ஜனநாயகச்சிறப்புக்கள்.

தமிழ்பேசும் மக்களுக்கெதிரான யுத்தத்திற்கு பெருமளவு ஆயுதக்கொள்வனவு, அபிவிருத்திக்காக உலகநாடுகள் வழங்கிய நிதிகளில் நடந்த முறைகேடுகள் குடும்பத்தினரால் நடந்த ஊழல்கள் அனைத்துமே நாட்டை வங்குரோத்தாக்கிவிட்டது. அனைத்துமக்களையும் போர்முனைக்கு தள்ளி ஒரு மயானபூமிமீது பிரேமதாசாவின் சாம்ராஜ்சியம் நடத்தப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு மனிதகுல விரோதியை அம்பலப்படுத்துகின்ற குற்றவாளிக்கூண்டில் ஏற்றுகின்ற, தோற்கடிக்கின்ற கடமையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் எந்தவித கிலேசங்களுமின்றி முன்நிற்கிறோம். எமதுமக்களின் உரிமைக்கான போராட்டத்தில் முக்கியமான காலகட்டமிது என நாம் எண்ணுகிறோம்.

தமிழ்பேசும் மக்களின் பொது எதிரியாகிய பிரேமதாசா தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதில் எம்மிடையே மாற்றுக்கருத்துக்கள் எதுவுமில்லை. புலிகளைப்போலவோ அன்றி அவர்களின் வால்களைப்போன்ற ஈரோசைப்போலவோ சாய்ந்துகொண்டிருக்கும் சர்வாதிகாரி பிரேமதாசாவுக்கு முண்டுகொடுக்க விரும்பவில்லை. ஒரு சர்வாதிகாரிக்கெதிரான ஜனநாயக ரீதியான எமது போராட்டம் நீதியானது. பிரேமதாசாவின் ஜனநாயக முகமூடி கிழிய ஆரம்பித்தமைக்கு காரணமானது. இதுவே எமது மக்களது உரிமைகளைப் பெறுவதற்கு ஆரம்பமாகும் என்று முற்போக்கு சக்திகளின் கரங்களை பலப்படுத்துவோம்.

## புலிகளின் கட்டுப்பாடு ஆகா பிரமாதம்

மட்டக்களப்பு மாவட்டம் மகிழடித்தீவு என்னும் இடத்துக்கு அருகில் உள்ள கொல்லமலை என்னுமிடத்தில் புலிஉறுப்பினர்களான குபேரன், மண்முனைக்கோடி, திருச்செல்வம், அச்சா ஆகிய நால்வரும் அதே இடத்தைச் சேர்ந்த கருணா என்னும் பதினைந்து வயது யுவதியை கற்பழித்துக்கொன்றார்கள் ஆரம்பத்தில் மூடிமறைக்கப்பட்ட இச்செய்தி மக்கள் மத்தியில் அம்பலமாகியதைத்தொடர்ந்து நிலைமையைச் சமாளிக்கவேண்டி இந்நால்வருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## புலிகள் - நக்சலைட்டுகள்உறவு

கர்நாடகத்திலும்,தமிழநாட்டிலும் நக்சலைட்டுகளுக்கு புலிகள் ஆயுதங் வழங்கி உள்ளனர் எனவும் இதற்குப்போதிய ஆதாரங்கள் உண்டெனவும் கர்நாடக மாநில உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. மட்டக்களப்பைச்சேர்ந்த வேணு அல்லது சுரேஷ் என்று அழைக்கப்படும் கருணாகரன் என்னும் புலிஉறுப்பினரால் மக்கள் யுத்தக்குழு என்று அழைக்கப்படும் நக்சலைட்டுகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தமக்கு ஆதரவாக சுவரொட்டிகள் ஒட்டுமாறு பெருந்தொகையான பணத்தை நக்சலைட்டுகளுக்குப் புலிகள் வழங்கி உள்ளனர். தர்மபுரி, நீலகிரி மாவட்டங்களில் இதுதொடர்பாக பல நக்சலைட்டுகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### மன்னார் - கல்பிட்டி கடல்பயணம்

## ஒருவர் ஏழு இடங்களில் விண்ணப்பிக்கவேண்டும்

ர

மன்னாரிலிருந்து கல்பிட்டிக்கு படகுகள்மூலம் பிரயாணிகள் வருவதென்றால் ஏழு விண்ணப்பங்கள் தயார்செய்து அனுமதிபெறவேண்டும் என்று கூறப்படுகிறது.

மன்னார்பகுதி பிரயாணிகள் முதலில் அவர்களின் பகுதி கிராமசேவகர்களிடமும்,பின்னர் உதவி அரசாங்க அதிபரிடமும்,தொடர்ந்து மன்னார் நகர கமாண்டரிடமும்,படகில் ஏறும்போது தாழ்வுபாடு இராணுவஅதிகாரியிடமும் இறுதியில் கல்பிட்டி கடற்படை அதிகாரியிடமும் விண்ணப்பங்களை கையளிக்கவேண்டும்.

இதேசமயம் பள்ளிமுனையிலிருந்து விடத்தல் தீவுக்கும், மன்னாரிலிருந்து கல்பிட்டிக்கும் செல்லும் பிரயாணிகள் தங்கள் பிரயாண அனுமதி விண்ணப்பங்களை தயார்செய்ய காகிததாள்கள் இல்லாது அவதிப்படுவதாகவும் தெரியவருகின்றது

### தமிழ்நாட்டில்

## புலிகள் ஆதரவு கூட்டங்கள் ஊர்வலங்கள் நடாத்தத்தடை

### ஜெயலலிதா அறிவிப்பு

டி

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவாகக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடாத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது, இத்தடையைமீறி ஊர்வலம், கூட்டம் நடாத்துவோர் தேசியபாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரிக்கை விடுத்துள்ளார்,

சட்டப் பேரவையில் இந்திராகாங்கிரஸ் உறுப்பினர் குமரிஆனந்தனின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார், தமிழக பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு தாக்குப்பிடிக்கமுடியாமல் புலிகள் பிறமாநிலங்களுக்கு ஓடி ஒளிந்துள்ளனர், என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும் என ஜெயலலிதா கூறியுள்ளார்.

## சொல்லுவும் வெட்கமடா

அன்புதாசரின் இருக்கையே ஆடிப்போய்விட்ட இந்தநேரத்தில் நாட்டுமக்கள் இமைதபேதமின்றி வாழஉழைக்கும் ஒப்பற்ற தலைவர் அன்புதாசர் என வன்னி அமைச்சர் மனோகரஅம்மையார் தெரிவித்துள்ளார். இ.போ.சா. மக்கள் மயமாக்கப்பட்டபின்பு பஸ்களில் தமிழ் அகற்றப்பட்டு சிங்களம் இடம்பெற்றுவருகிறது, இது அன்புதாசரின் இன மொழி மதபேதமற்ற அரசியலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு, நல்ல தீர்ப்பை உலகம் சொல்லும் நாள்வரும்போது அங்கே நல்லவர் யார் கெட்டவர்யார் தெரியும் அப்போது.

அன்புதாசரின் படத்தையும் தனது படத்தையும் இணைத்து ஆளவு உயரத்தில் ஆலுவலகத்தில் மாட்டிவைத்துக்கொண்டு தேவர்களைப்போல எந்நேரமும் ஆனந்தமாய் இருந்த தமிழர்களுக்கு தானும் ஒரு தலைவன்என தம்பட்டம் அடித்துக்கொண்டவர், இப்போது தனது முக்கிய சகாக்களை சவிசில் இறக்கியுள்ளாராம், அன்புதாசரிடமிருந்து பதவி பறிபோனால் தானும் வெளிநாடு போகத்திட்டமாம், யாதும் ஊரே யாவரும் கேளீர் ஒன்றே எங்கள் உலகதத்துவம்.

ஐயப்பாடின்றி தேய்ந்துவரும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசலை தமக்கு சாதகமாகப்பாவித்து முன்னுக்குவரவேண்டி அனுராகவும் தாயும் தமது பூசல்களை மூட்டைகட்டி வைத்துவிட்டு ஒன்றுசேர்ந்துள்ளார்களாம். தாயில்லாமல் நானில்லை......

அன்புதாசரோ அன்றி அனுராகவும் தாயாருமோ இனப்பிரச்சனைக்கு என்ன தீர்வை முன்வைக்கிறார்கள் என்பது தெரிந்த பின்புதான் நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஆதரிப்பதா இல்லையா எனத் தீர்மானிப்போம் என கூட்டணி மாவை தெரிவித்துள்ளார். இதுநாகரீக முறையில் அன்புதாசரை ஆதரிக்கும் கெட்டித்தனம். அடங்கொப்பரான சத்தியமா நான் காவல்காரன் தமிழரின் காவல்காரன்.

இன்றைய அரசியல் நெருக்கடி ஒருகட்சி மோதல் அல்ல,இது ஒரு வர்க்கமோதல். நாட்டின் அதிஉயர் பதவியை எந்த ஒருவரும் அடைவதற்கு நாம் திறந்துவிட்ட பாதையை மூடிவிடுவதற்கான முயற்சியே நடக்கிறது. இந்தப்பாதையை தொடர அனுமதித்தால் நிலப்பிரபுத்துவத்தின் முடிவுக்கு வழிவகுக்கும் என குழப்புபவர்கள் அறிவார்கள் என அன்புதாசர் சித்தாந்தம் பேசியுள்ளார். ஆர் ஆர் எது எதைப்பற்றி பேசுவதென விவஸ்தையே இல்லாமல் போச்சு. நீங்கள் நல்லா இருக்கோணும் நீங்கள் முன்னேற, இந்தநாட்டிலுள்ள மக்களின் வாழ்வு பின்னேற.

பங்கருக்குள் பதுங்கிவாழும் சங்கத்தமிழ் தலைவர்களின் மாவீரர்கள் மக்களிடம் பணம்பறிக்க பல புதுவழிகளைக் கையாண்டுவருகின்றனராம். வடமராட்சிப்பகுதிகளில் சைக்கிள் பாக் அமைத்து அங்கேயே அனைத்து சைக்கிள்களும் நிறுத்தப்படவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டு கட்டாயபணம் வசூலிக்கப்படுகிறதாம். வேறு இடங்களில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்படுகிறதாம். இதுதவிர குடாநாட்டுக்குள் பிரபல்ய ஆலயங்கள் அனைத்தையும், திறப்புக்களை வாங்கி வருமானங்களை வசூலித்துவரும் மாவீரர்கள் சாதாரண கோயில்களில் அர்ச்சனைப்பணத்தைக்கூட விட்டுவைப்பதில்லையாம். பணம் இருந்தால் இந்த உலகத்திலே பலகதை நடக்குதப்பா

படிப்பகம்

www.padippakam.com



## யாழ்-கொழும்பு பயணம் ஒரு பயங்கர அனுபவம்

# 250 மைல்கள் கடக்க 10நாட்கள்; 13 ஆயிரம் ரூபா செலவு.

யாப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ஆர். குமாரசுவாமி 250 மைல்கள் பயணம்செய்து கொழும்பில்வாழும் தன் கணவரையும் பிள்ளைகளையும் வந்தடைய 13 ஆயிரம் ரூபா செலவழித்துள்ளார். கொழும்பை வந்துசேரப் பத்து நாட்கள் கழிந்திருக்கின்றன.

புலிகளின் ஆனையிறவு இராணுவமுகாம் முற்றுகை முறியடிக்கப்பட்டு கொழும்பு செல்லப் புலிகள் அனுமதித்திருக்கிறார்களென்ற செய்தி பரவிக்கொண்டிருந்தபோது தனது பயணத்தைத் தொடரத் திருமதி குமாரசாமி தீர்மானித்துள்ளார். ஆனையிறவு யுத்தம் முடிந்து இரண்டாவது நாள் திருநெல்வேலியில் இருக்கும் புலிகளின் காரியாலயத்துக்கு தனதுஉறவினர் ஒருவரின் உதவியுடன் சைக்கிளில் வந்துசேர்ந்தார்.

புலிகள் அலுவலகத்துக்குவெளியே நீண்டிருந்தகியூவில் காலை எட்டுமணிக்கே சேர்ந்துகொண்டேன். புலி இயக்க உறுப்பினர் ஒருவரால் ஒருவர்பின்ஒருவராக நாம் விசாரிக்கப்பட்டோம். நான் ஏன் கொழும்பு செல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

எனது கணவர் கொழும்பில் அரசநிறுவனமொன்றில் வேலை செய்கிறார் பிள்ளைகளும் அங்கே படிக்கிறார்கள் என்றேன்.

உமது கணவர் யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாதா? என்று கேட்டார் புலி உறுப்பினர்.

கணவருக்கு சுகமில்லை பிள்ளைகளை விட்டுவிட்டு அவரால் வரமுடியாது என்றேன். எனது பிள்ளைகளைப் பொலிசார் தொந்தரவு செய்தார்களா? என்று கேட்டார். அவர்களிடமிருந்து கடிதம் வராததால் எதுவும் தெரியாது என்றுகூறினேன்.

அதன் பின்னர் சிற்றூர் அவையின் சிபார்சுக்கடிதம் எங்கேஎன்று கேள்வி எழுந்தது. சிபார்சுக்கடிதம் பெறவில்லையென்று நான் பதிலளித்ததும், புலிகளுக்கு கொடுக்கவேண்டிய இரு பவுண் தங்கத்தையும் வழங்கி விட்டேனா என்று கேள்வி கேட்கப்பட்டேன் "இல்லை" என்றதும், சிபார்சுக் கடிதத்தையும் புலிகளுக்கு பவுண் கொடுத்ததற்கான ரசீதையும் எடுத்துக்கொண்டு வருமாறு நான் கேட்கப்பட்டேன். இந்தச் சம்பிரதாயங்களை எல்லாம் முடிப்பதற்கு மேலும் மூன்று நாட்கள் சென்றது. இதன் பின்னர் திருநெல்வேலி புலி அலுவலகத்தில் பாஸ் பெறுவதற்காக மேலும் ஒருநாள் செலவழிக்க வேண்டியேற்பட்டது.

உண்மையான பயணத்திற்கு மேலும் மூன்றுநாட்கள் செலவாகின. கடந்த வியாளக்கிழமை காலை யாழ்ப்பாணத்தைவிட்டு திருமதி குமாரசுவாமி புறப்பட்டார். 300 ரூபா கொடுத்து தனியார் பஸ் ஒன்றின்மூலம் சங்குப்பிட்டி வரை பயணம்செய்தார். படகு மூலம் பூநகரி வருவதற்கான செலவும் இதில் அடங்கும்.

பூநகரியில் வாகனங்கள் இல்லை. ஏனையவர்களுடன் சேர்ந்து சுமார் மூன்று மைல்களை நடை நடையாகவே கடந்து மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் உள்ள இடத்துக்கு வந்துசேர்ந்தோம். 1500ரூபா அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஒரு மோட்டார் சைக்கிளில் இருவர் ஏற்றிச் செல்லப்படுவார்கள். மிகமெதுவான, கஷ்டமான பயணம் அது. இரவைக் கிளிநொச்சியில் கழித்து விட்டுக் காலை மீண்டும் புறப்பட்டு அன்று இரவு ஓமந்தை வந்தடைந்தோம். ஓமந்தையில் இரண்டாம்நாள் இரவைக் கழித்தோம். மறுநாள் காலை ஓமந்தையில் இருந்து தாண்டிக்குளம் வரை சைக்கிள்களில் ஏற்றிவரப்பட்டோம். இதற்கு ஆயிரம் ரூபா வாங்கிக்கொண்டனர்.

தாண்டிக்குளம் புலித்தடை முகாமில் நாம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோம். புலிகள் தந்த பாஸ்களையும் அங்கு வாங்கிக்கொண்டார்கள். பின்னர் மேலும் முக்கால் மைல் தூரம் நடந்துவந்து "புளொட்" இயக்கத்தடை முகாமை வந்தடைந்தோம். அங்கிருந்து இராணுவ தடைமுகாமை வந்தடைந்தோம். அங்கிருந்து பஸ் மூலம் வவுனியா வந்து பின்னர் வவுனியாவிலிருந்து ரயில்மூலம் கொழும்பு வந்து சேர்ந்தோம் என்றார் திருமதி குமாரசுவாமி.

ஆனையிறவு யுத்தம் புலிகளுக்கு பலத்த அடியாக அமைந்து விட்டது. புலிகளை மக்கள் விமர்சிக்கிறார்கள். ஆனால் பகிரங்கமாகக் கண்டிக்கும் திராணி அவர்களுக்கில்லை. எனெனில் எப்படியோ புலிகளுடன் அவர்கள் நீண்ட காலம் வாழவேண்டிய நிலையில் தான் உள்ளனர். என்கிறார் திருமதி குமாரசுவாமி. (நன்றி தினகரன்)

## முகத்தாரின் முணுமுணுப்பு



ஆனையிறவிலை அல்லோல கல்லோலப்பட்டுப்போனவர்கள் அதை மறைக்க தொண்டமான் தலைமையிலை பேச்சுவார்த்தை எண்டு தொடங்கிச்சினம் அதுவும் பிசகுபட்டுப்போச்சு. இவை எதையோ நினைச்சு தொடங்க எங்கயோ போய்நிற்குது. இவர்களின் ஆப்த நண்பன் பிரேமதாசாவுக்கு வயித்தை கலக்குற சம்பவங்கள் கொழும்பிலை நடந்து கொண்டிருக்கு. ஆனாலும் முல்லைத்தீவிலை இராணுவம் தாக்குதல்களிலை முன்னேறிக்கொண்டிருக்கெண்டு செய்திகள் வருகுது. இவையளும் பிரேமதாசாவும் நண்பர்கள் எண்டால் பிறகேன் சண்டை? அது வந்து.... வந்து அதுதான் தமிழ் ஈழம். அதுக்குத்தான் சண்டை இன்னும் இதை நம்பிக்கொண்டிருக்கிற அல்லது உயிர்வாழ வேண்டி நம்பிறமாதிரி நடித்துக்கொண்டிருக்கிற சனங்கள் இருக்கும் வரைக்கும் சண்டை தமிழீழத்துக்குத்தான்.

ஆமி நல்ல ருசிகண்டிட்டுது. மழைலைப் பட்டாளங்களை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாமல் இவை திண்டாடுறதை புரிஞ்சுகொண்ட ஆமி இதுதான் தருணம் எண்டு ஆனையிறவை முடித்துக்கொண்டு முல்லைத்தீவிலை வந்து நிக்குது. தொடர்ந்து வடக்கு நோக்கி முன்னேறினால் பிறகென்ன இவையளுக்கு தமிழீழம் கிடைச்ச மாதிரித்தான்.

இவையளும் ஒருபுறம்சண்டை, வெண்டால் தொடர்ந்து சண்டை, தோத்தால் பேச்சுவார்த்தை. பிரேமதாசாவும் ஒருபுறம் சண்டை மறுபுறம் சமாதானம் பேச்சுவார்த்தை, ஆன்மீக வழியில் அரசியல் என மாயாஜாலம். இப்படிப்பட்ட நண்பர் பிரேமதாசாவுக்கு கதிரைக்கு வந்திருக்கிற ஆபத்தை காப்பாற்ற இவையள் உஷாராயிட்டினமாம். ஆகா என்னே நட்பு.... என்னே அன்பு...

அதுசரி ஆமி என்னதான் முன்னேறினாலும் இவையளின்ரை தலைவர்களை பிடிக்கிற விடயத்திலை பின்வாங்கத்தான் செய்யும். ஏன் எண்டால் இவையள் தோத்துப்போனால் அதுக்கடுத்து வரப்போறவையிட்ட பிரேமதாசாவாலை சமாளிக்க ஏலாது. பிரேமதாசாவின்ரை தில்லுமுல்லெல்லாம் அங்க செல்லாது. அவங்கள் மாகாண சபை நடத்தின காலத்திலை கொடுத்த அரசியல் நெருக்கடிகளை சமாளிக்கமுடியாமல் தான் புலிகளோட கூட்டுச்சேர்ந்து எதிரிக்கு எதிரி நமக்கு நண்பன் எண்ட பாணியிலை மாகாண சபையையே இல்லாமல் பண்ணினவர். பிரேமதாசாவின்ரை அரசியல் தேவைப்படி தன்னைவிட அரசியல் குறைந்த அல்லது தன்னளவு உள்ளவை ஆயுதம்வைத்திருந்தாலும் அவையை சமாளிக்கலாம்.

ஆனால் தன்னைப்போல சுத்துமாத்து செய்யிறவை எண்ட ஒரே தகுதி இருந்தாப்போதும். அதைவிட்டு நேர்மையான அரசியல் செய்யிறம் எண்டு தனக்கு நெருக்கடிகளை கொடுக்கிறவையை எப்பவும் இல்லாமல் பண்ணவேணும். அல்லது இரண்டாம் நிலைக்கு அல்லது முடிஞ்சால் அதுக்கு கீழ் கொண்டு வரவேணும்.

அந்த விதத்திலை மாகாண சபை பொடியளை பிடிக்காமல் விடுகிறதும் பங்கர் வீரர்களை பிரேமதாசாவுக்கு பிடிக்கிறதும் நியாயம் தான். ஏன் எண்டால் பிரேமதாசாவுக்கும் பங்கர் வீரர்களுக்கும் இருக்கிறது விசேட ஒற்றுமையே மக்களைப்பற்றி அலட்டிக் கொள்ளாதது தான்.

பாப்பம்... பாப்பம். இது எத்தனை நாளைக்கெண்டு. எங்கபோய் நிக்குது எண்டு.

## இது சோக்கல்லோ...

நாங்கள் விமான எதிர்ப்பு பீரங்கி வாங்க என வெளிநாட்டில் 'போராட்ட நிதியென்று சேர்த்தபணத்தில் வாங்கிய பீரங்கிகளைத் தான் ஆனையிறவில் பாவித்தோம். மக்கள் இன்னும் நிதியுதவி செய்ய வேண்டும்.

(வெளிநாட்டில் புலிகள்)

" இந்திய அமைதிகாக்கும்படையை எதிர்த்துப்போரிட புலிகளுக்கு இலங்கை அரசு பதினேழு விமானஎதிர்ப்புப் பீரங்கிகளை கொடுத்தது. அவை இப்போது அரசின் இராணுவ ஹெலிக்கொப்டர்களுக்கு, பொம்பர்களுக்கு எதிராக ஆனையிறவில் பாவிக்கப்பட்டது.

(காமினி திசநாயக்கா)

" இல்லை இல்லை நாங்கள் விமானஎதிர்ப்புப்பீரங்கி கொடுக்கவில்லை மாகாணசபையின் தேசியஇராணுவத்தை அழிக்க ஆயுதங்கள் தான் கொடுத்தோம்.

(பாதுகாப்பு அமைச்சு)

" இந்தியன் ஆமிக்கெதிராக சண்டைபோட இலங்கை அரசு ஆயுதங்கள், கார்கள், நிதியுதவி வழங்கியது.

(தமிழ்நாட்டில் பிடிபட்ட புலிகள்)

" புலிகள் பங்கர்கட்ட அரசு சீமெந்து மற்றும் பொருட்கள் கொடுத்து உதவியது.

(லலித் அத்துலத்முதலி)

" ராஜீவை கொலைசெய்து பிடிபட்டவர்களைத் தீர்த்துக்கட்ட சட்டத்தரணிகள் என்ற போர்வையில் ஒருகுழுவை தயார்செய்தனர். ஆனால் பாதுகாப்புகள் பலமாயிருந்ததால் அந்நடவடிக்கை கைவிடப்பட்டது.

(ஒற்றைக்கண் சிவராசனின்சாரதி ரங்கன்)

" நாங்கள் ராஜீவ்காந்தியை கொலை செய்யவில்லை.

(பி.பி.சி.க்கு பிரபாகரன் பேட்டியென பத்திரிகை செய்தி)

# இராணுவம், புலிகளினால் ஆயிரக்கணக்கில் கொலைகள்

## சர்வதேச மன்னிப்பு சபை கூறுகிறது.

சமீபத்திய மாதங்களில் ஆயிரக்கணக்கான மக்களை இலங்கை ஆயுதப்படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கொன்றிருப்பதாக சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு ஆரம்பத்தில் இலங்கைக்கு அனுப்பிய ஆய்வுக்குழுவொன்று இராணுவத்தினாலும் தமிழ் புலிகளினாலும் பரவலாக வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்களுடன் திரும்பியிருப்பதாகவும் மன்னிப்புச்சபை அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் அரசாங்க படைகளினால் கைதுசெய்யப்படுகிறார்கள். சுடப்படுகிறார்கள். சாகும்வரை வெட்டப்படுகிறார்கள் அல்லது உயிருடன் எரிக்கப்படுகிறார்கள் எனவும் குழந்தைகள் முதல் எழுபது வயது வரையிலான கிராமத்தவர்களான முழுக்குடும்பங்களும் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு காணாமற்போயிருப்பதாக அல்லது காவலில் இருக்கையில் கொல்லப்பட்டதாகவும் அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் துஷ்பிரயோகத்துக்கு புலிகளும் இதேயளவு குற்றவாளிகள் எனவும் குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கை நூற்றுக்கணக்கான பொதுமக்களை அவர்கள் கொன்றிருப்பதாகவும் தமிழ்கைதிகளில் பெரும்பாலானோர் சித்திரவதை செய்யப்படுவதாகவும் கூறியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



## அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே !

இலங்கையின் அதி உயர் பதவியான ஜனாதிபதிப்பதவி வகித்த பிரேமதாசாவின் கதிரை ஆட்டம்கண்டுள்ளது. தன்னகத்தே அனைத்து அதிகாரங்களையும் அடக்கிக்கொண்டு தனிப்பெரும் சர்வாதிகாரியாக பவனி வந்த பிரேமதாசாவை ஐ.தே.கட்சிக்குள்ளேயே காமினிதிசநாயக்கா, லலித்அத்துலத்முதலி இன்னும்சில அதிருப்தியாளர்கள் எதிர்கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு காலை வாரிவிட்டுள்ளார்கள்.

அரசியல் அதிகாரத்துஷ்பிரயோகமும் பழிவாங்கல்களும், எதிர்ப்பாளர்களை ஜே. வி. பி. ஆதரவாளர் பட்டியலில் போட்டு படுகொலைகளுமாக ஜனநாயக விரோத சமாதான சமூகவிரோதச்செயல்களில் தான்தோன்றித்தனமாக ஈடுபட்டிருந்த பிரேமதாசா, பதவிபறிக்கப்பட வேண்டியவரே. தமிழ்பேசும்மக்களைப் பொறுத்தவரை பிரேமதாசா இனத்துவேசிகள்வரிசையில் வெறுக்கத்தக்களவு விரோதியே

தமிழ்பேசும் மாணவர்களின் கல்விக்கு பெரும்பங்காற்றிய யாழ் பொது நூல்நிலையத்தை எரித்துச் சாம்பராக்கி மாணவர்களின் கல்விக்குவேட்டுவைத்த பெரும்கைங்காரியத்தை செய்து முடித்து தமிழ் பேசும் மக்களின் வயிற்றெரிச்சலை கொட்டிக்கொண்ட பெருந்தகை பிரேமதாசா.

பின்பு நூல்நிலைய நிதிக்கென இந்தியாவிலிருந்து நாட்டிய தாரகை சுவர்ணமுகியை வரவழைத்து நிகழ்ச்சிநடாத்தி மாஜாலவித்தை காட்டிய பிரேமதாசாவை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

அரசியல் நெருக்கடிகள் காரணமாக ஜே. ஆர். தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வை மாகாணசபை மூலம் தீர்ப்பதாக கூறி இந்தியாவுடன் இணை

களவென்றும் எல்லோரும் நம்பிப் பின்வாங்கியவேளையில் புலிகளால் முடியாத. புலிகள் விரும்பாத மாகாண அமைப்பை உருவாக்க யாரும் முன் வந்தால் இரத்த ஆறு ஓடும் என. எல்லோரும் நமக்கேன் வீண்வம்பு என ஒதுங்கிக்கொண்டபோது தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அர்த்தமற்றதாகி விடக்கூடாது, புலிகளின் அரசியல் வறுமையால் திசைமாறிப் போன போராட்டத்தில் திக்கற்று நிற்கும் எமது மக்களுக்கு ஓர் இடைவேளை தேவை என்பதை எல்லாம் கணக்கில் கொண்டு, பூச்சாண்டி என்று ஜே.ஆர்.எண்ணியிருந்த மாகாணசபையை அர்த்தமுள்ளதாக்கி மந்திரிசபை அமைத்து அரசியல் வியூகம் வகுத்தவர்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள்.

> அன்று தமிழ்பேசும்மக்கள் முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் நிராகரித்த ஜனாதிபதி ஆட்சிமுறையை இன்று பாராளுமன்றத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எதிர்க்கின்றனர். இது தமிழ்பேசும் மக்களின் விருப்பை பிரதிபலிக்கும் ஒரு சம்பவமாகும். தமிழ்பேசும் மக்களின்விருப்பைகருத்தில்கொண்டே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்கள் செயற்படுகின்றோம்.

மாகாணஅரசு வருத்த மக்கள் நலன் திட்டங்களினால் கதிகலங்கிப்

இனப்பிரச்சனைக்கு தீர்வொன்றை முன்வைக்க விரும்பாத பிரேமதாசா காலத்துக்குக் காலம் சர்வ கட்சி மாநாடு, பேச்சுவார்த்தைகள், பாராளுமன்றத் தெரிவுக்குழு என அரசியல் நாடகமாடிவருவது யாவரும்அறிந்ததே

## அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே !

இறுதிப்போர்என மார்தட்டிய புலிகள் ஆனையிறவில் ஏற்பட்ட தோல்வியினாலும், முல்லைத்தீவில் சந்தித்து வரும் இழப்புகளினாலும், ராஜீவ் படுகொலையால் இந்தியாவிலும் உலகஅரங்கிலும் ஏற்பட்டுவரும் நெருக்கடிகளாலும் வடக்கு - கிழக்கில் அடக்கு முறையின் உச்சக்கட்டத்தை அனுபவித்துவரும் மக்களுக்கு ஏமாற்று வித்தை காட்டவும் வேண்டி பிரேமதாசா கால்களில் சரணாகதி அடைந்துள்ளனர்.

பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்ததோடு பாராளுமன்ற உறுப்பினர்களை படுகொலைசெய்தும் வந்த புலிகள் இப்போது பிரேமதாசா ஆட்டம் கண்டுள்ளதைப் புரிந்துகொண்டு அவரின் கரத்தைப் பலப்படுத்தவேண்டியும், தங்களால் கலைக்கப்பட்ட ஈரோஸ் (புலி) உறுப்பினர்களுடன் தமது உறுப்பினர்களையும் இணைத்து பாராளமன்றம் அனுப்பியுள்ளார்கள்.

இலங்கை இராணுவத்துடன் தமிழீழப் போர் நடாத்திக்கொண்டிருந்த புலிகள். இராணுவம் அப்பாவி மக்களை கொன்றுகுவித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் கொழும்பில் ஐந்துநட்சத்திரக் ஹோட்டலில் இராணுவப் பாதுகாப்புடன் அமர்ந்திருப்பதும் அரசியல் தீர்வு எனப்பிதற்றிக் கொண்டு இராணுவத்தீர்வை அமுல்படுத்தி வரும் பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதும் இதனை இராஜதந்திரம் என வெளிநாடுகளில் உள்ள தமிழ்பேசும் மக்களை நம்பவைத்துப் பணம்பண்ணுவதும் புலிகளின் தனிப்பாணி.

ஆர்.டி.சில்வா மற்றும் ஹேகணவிஜய வீரா ஆகியோர் போட்டியிட்டனர்.

மலையக மக்களுக்கு எதிரான இனவாத நடவடிக்கையில்ஈடுபட்டவரான கொப்பேகடுவேக்கே தமிழ் பேசும் மக்கள் வாக்களித்தனர். அச் சூழ்நிலையில் ஜனாதிபதி ஆட்சிமுறை எவ்வளவு ஆபத்தானது என்பதை மட்டுமே தமிழ்பேசும் மக்கள் கவனத்தில் கொண்டிருந்தனர். சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருந்தபோதும் நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கவேண்டும் என்ற கருத்தை சுதந்திரக்கட்சி கொண்டிருந்தமையாலேயே தமிழ் பேசும் மக்கள் கொப்பேகடுவேக்கு வாக்களித்தனர்.

> அரசியல் நெருக்கடிகள் காரணமாக ஜே. ஆர். தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வை மாகாணசபை மூலம் தீர்ப்பதாக கூறி இந்தியாவுடன் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பம் முதல் எதிர்த்து வந்ததன் மூலம் தமிழ்பேசும் மக்களின் மீதுள்ள வெறுப்பை வெளிக்காட்டிக்கொண்டார்.

இன்று ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டபோது பாராளுமன்றக் கூட்டத்தொடரையே தமது அதிகாரத்தைப் பாவித்து பிரேமதாசா ஒத்திவைத்தார். இது பாராளுமன்ற ஜனநாயகத்தையே கேலிக்கூத்

# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

ந்து ஏற்படுத்திக்கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பம் முதல் எதிர்த்து வந்ததன்மூலம் தமிழ்பேசும் மக்கள் மீதுள்ள வெறுப்பை வெளிக்காட்டிக்கொண்டார்.

> தமிழ்பேசும் மாணவர்களின் கல்விக்கு பெரும்பங்காற்றிய யாழ். பொது நூல்நிலையத்தை எரித்துச் சாம்பராக்கி மாணவர்களின் கல்விக்கு வேட்டுவைத்த பெருங்கைங்கரியத்தை செய்து முடித்து தமிழ் பேசும் மக்களின் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொண்ட பெருந்தகை பிரேமதாசா

ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதா ? தமிழ்பேசும் மக்களுக்கு என்ன நன்மை கிட்டியது என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருக்க அதில்கிடைக்கக்கூடிய நன்மைகளை தமிழ் பேசும் மக்கள் பெறாமல் தட்டிப்பறிப்பதில் புலிகளை இணைத்துக்கொண்டு பெரும் பங்காற்றியவர் பிரேமதாசா.

தாம் ஆட்சிக்கு வந்தால் இந்திய சமாதானப்படையை வெளியேற்றுவேன் என அறிவித்தல் விடுத்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு அமைதிச்சூழல் ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கைக்கு வேட்டுவைத்தவர்.

நாற்பதாண்டு காலமாக தமிழ் பேசும் மக்கள் நடாத்திவந்த உரிமைப்போராட்டத்தில் கிட்டிய வெற்றிப்படியே மாகாணசபையை தமிழ்பேசும் தம்மைத்தாமே ஆள்வதற்கு அமைத்துக்கொண்டதாகும். மாகாணசபை என்பது வெறும் பூச்சாண்டி என்றும் ஒரு

போன புலிகளும், பிரேமதாசாக் கூட்டமும் நிர்வாகத்தடைமுதல் அதிகாரப் பரவலாக்கல் இழுத்தடிப்புவரை கைகோர்த்துக்கொண்டு நடாத்திமுடித்த சடுகுடு விளையாட்டுக்கள் ஏராளம்.

அதிகாரப் பரவலாக்கலில் இழுத்தடிப்பின் மர்மத்தைப் புரிந்துகொண்டு தமிழ் பேசும் மக்கள் தாமே அமைத்துக்கொண்ட மாகாண அரசையும், தமிழ்பேசும் மக்களையும் பாதுகாக்க தமிழ் தேசிய இராணுவத்தை அமைத்துக்கொண்டபோது புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி நிர்மூலமாக்கிய சூத்திரதாரி பிரேமதாசா.

தமிழ்பேசும் மக்கள் தொடர்பான கடந்தகால அரசியல் அனுபவங்களினால் அதிகாரப்பரவலாக்கலை இழுத்தடிப்பதன் மூலம் காலத்தை கடத்தலாம் எனநம்பிய பிரேமதாசாவுக்கு வளைந்து கொடுக்காது. மாகாணஅரசுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்டே தீரவேண்டும் எனஅரசியல் போராட்டம் நடாத்திய மாகாண அரசின் அமைச்சரவையின் உறுதியைக் கண்டு ஈடாடிப்போன பிரேமதாசா இந்தியப்படையை அனுப்பி, தேசிய இராணுவத்தை ஒடுக்கி, மாகாணஅரசை இல்லாமலாக்கி தமது சேவகர்களாகப் புலிகளைப் பாவித்து அனைத்தையும் இலகுவில் செய்து முடித்தார் பிரேமதாசா.

தொடர்ந்து ஒருபுறம் யுத்தம் என்ற போர்வையில் இராணுவப் படுகொலைகளையும் மறுபுறம் உணவு பொருளாதாரத்தடைமூலம் பட்டினிப் படுகொலைகளையும் தமிழ்மக்கள் மீது திணித்து வருவதோடு, தமிழ்பேசும் மக்களுக்காக இந்தியா குரல்கொடுத்தமையால் உலக அரங்கில் வடக்கு-கிழக்கு அவலங்கள் அம்பலப்பட்டு வந்தமையை புலிகள் துணைகொண்டு இல்லாமல் செய்து, தமிழ் பேசும் மக்களின் மரணஓலங்கள் தீவுக்குள்ளேயே அடங்கிப்போகச் செய்து இராணுவத்தீர்வை நடைமுறைப்படுத்தி வருவதை தமிழ் பேசும் மக்கள் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது.

> மாகாணஅரசு வருத்த மக்கள் நலன் திட்டங்களினால் கதிகலங்கிப் போன புலிகளும், பிரேமதாசா கூட்டமும் நிர்வாகத்தடைமுதல் அதிகாரப்பரவலாக்கல் இழுத்தடிப்புவரை கைகோர்த்துக்கொண்டு நடாத்தி முடித்த சடுகுடு விளையாட்டுகள் ஏராளம் ஏராளம்.

பிரேமதாசா ஒரு தனிமனிதனாக சகல அதிகாரங்களையும் தன்னகத்தே அடக்கிக்கொண்டு தம்மை எதிர்ப்பவர்களை தெற்கில் படுகொலை செய்வதையும் வடக்கு கிழக்கில் மக்களை கொன்று குவிப்பதே

இனப்பிரச்சனைக்கு தீர்வு என்னும் பாணியில் இராணுவ அட்டூழியங்களுக்கு காரணகர்த்தாவாக இருப்பதையும் அனுமதிக்கமுடியாது. இன்றைய சூழலில் பிரேமதாசா பதவியிலிருந்து விலக்கப்படவேண்டியது.அதற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டியது இலங்கை தழுவிய அரசியல் பொறுப்புள்ளவர்களின், மக்கள் நலன்களில் அக்கறைகொண்டவர்களின் தேசியக்கடமையாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட பாராளுமன்ற முறையை நீக்கி, ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம்கொண்டவராக ஆகும்விதத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றியமையை தமிழ்பேசும் மக்கள் ஆரம்பம் முதலே எதிர்த்து வந்துள்ளனர், முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான தேர்தலில் யூ. என். பி, சார்பில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும்,சுதந்திரக்கட்சி சார்பில் கொப்பேகடுவவும், தமிழ்பேசும் மக்கள் சார்பில் குமார் பொன்னம்பலமும், பழம்பெரும் இடதுசாரி கொல்வின்

தாக்கும் விடயமாகும். இது ஒன்றே ஜனாதிபதி தன்னகத்தே அதிகாரங்களை வைத்துக்கொண்டு அதிகாரத் துஷ்பிரயோகம் செய்கிறார் என்பதற்கு உதாரணமாகும்.

அன்று தமிழ்பேசும் மக்கள் முதலாவது ஜனாதிபதி தேர்தலில் நிராகரித்த ஜனாதிபதி ஆட்சி முறையை இன்று பாராளுமன்றத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் எதிர்க்கின்றனர். இது தமிழ்பேசும் மக்களின் விருப்பை பிரதிபலிக்கும் ஒரு சம்பவமாகும். தமிழ்பேசும் மக்களின் விருப்பை கருத்தில் கொண்டே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்களும் செயற்படுகிறோம்.

## அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே !

நாம் அரசியல் சூழ்நிலைக்கேற்ப மக்களின் அரசியல் அபிலாஷைகளை கணக்கில் எடுக்காது தான்தோன்றித்தனமான அரசியல் முடிவுகளை எடுப்பவர்கள் அல்ல. மக்களின் கருத்துக்களை கணக்கில் கொண்டே அரசியல் மாற்றங்களினால் ஏற்படும் சூழ்நிலைகளுக்கேற்ப முடிவுகளை தீர்மானித்து செயற்பட்டுவருகிறோம்.

இன்றைய சூழ்நிலையில் மக்கள், ஜனநாயக விரோதியான ஜனாதிபதி பிரேமதாசாவுக்கெதிராக குரல்கொடுக்க வேண்டியது. தமிழ்பேசும் மக்களின் விருப்பான ஜனாதிபதி ஆட்சிமுறைக்கெதிராக கையுயர்த்தவேண்டியது நமது அரசியல் கடமையாகும்.

★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★

படிப்பகம்

www.padippakam.com



# நேற்று இன்று நாளை

நேற்று
நான் விடுதலைகேட்டு
வெற்றிப் பாதையூடே
ஓடிச்சென்றேன்.

பாதையோ பள்ளம் மேடு
பயணங்கள் அறியாக் காடு
மரணமே எல்லைக் கோடு
மகிழ்வுடன் சென்றேன் ஊடு.

எனது
பாதை, பயணம்
நான் செய்யும் கொலை
அனைத்தும்
என்னைக் கௌரவித்தன.
விடுதலைப் பாதையைக்
தூய்மைப் படுத்தின.

முன்னால் சென்றவன்
பின்னால் வந்தவன்
சந்தித்த வதைகள்
சங்கமித்த மரணங்கள்
என்னைத் தடுக்கவில்லை
ஒப்பாரி வைத்து - நான்
ஊருலகைக் கூட்டவில்லை.

மண்ணை
மக்களை
மனதுள்ளே பூசித்து
என்னை மறந்து
எதிரிகளை எகிறி
முன்னேறிச் சென்றேன்.

தோழர்கள் பலரும்
என்னைத் தொடர்ந்தோடி
வந்தனர்
சிலர் -
சுதந்திர தாகம் மீறி
என்னைத்
தாண்டியும் சென்று
விடுதலைத் தீயில்
வெந்து
சாம்பராய் உரமாய்
சுவறினர், இந்த மண்ணில்

விடுதலைத் தீ
என்னை வெப்பத்தால்
சுட்டபோது
தகிடு தத்தங்கள் போடா
நின்று
தாங்கினேன் அதனை
அன்று.

வேள்வித் தீயின்
வெண்ணெயும் விறகும்
என்பத்தாறு சித்திரை
வாக்கில்
எவரும் அறியா
இரவின் நடுவில்
எரிந்து முடிந்தன.
சாம்பர் மட்டும்
குவியலாய்த் தெரியுது.

ரீலோவை அழித்துத்
தொடங்கிய இயக்கம்
ஸ்ரீ சபா அழிப்பில்
சுபமே முடிந்தது.

சிவகுமார் முகவுரைகள்
ஸ்ரீ சபா முடிவுரைகள்
அழியாத
அறிவுரைகள்.
மண்
மக்கள்
மனித நேயம்
விடுதலை - தமிழ்மொழி
எம்மவர் தாயகம்
மீட்பவர் தியாகங்கள்
என்ற -
வார்த்தைகள் வார்ப்புக்கள்
யாவும்
புலிகளாலேயே புதைக்கப்பட்டன
ஸ்ரீ சபா மட்டுமா
கல்லறை சென்றது ..........?

அநீதிக் கெதிராய்
அறைகூவல் விட்டவர்
அடையாளம்
விலாசம் அனைத்தையும்
இழந்து -
கடுகதி வேகத்தில்
கல்லறை சென்றனர்.

கல்லறை சென்றுவிட்ட
நல்லறிஞர்கள் காதை
சொல்லொணா விரியும்
எங்கள் சுதந்திர ஏட்டில்
இன்று.

விடுதலை வீரர் விட்ட
வெறுமையை நிரப்ப
இன்று
மறவரே வருவாரென்று
வெறுவாயை மென்று
நின்றேன்
குறவரே வந்து சேர்ந்தனர்
குரங்கொன்றைத்
தோளில் தாங்கி.

பொய் நிறை சாத்திரங்கள்
புகழ் ஏந்தும் வார்த்தை ஜாலம்
கண் நிறை கபடக் கூத்து
கருத்தற்ற விபரக் கூற்று
எம் மக்கள் இதனை ஏற்று
இருப்பதே இன்று மாற்று.

கரந்தடி வேட்டை ஆடிக்
காரியம் முடிக்க நிற்பார்
மாக்களை ஆட மாட்டார்
மக்களை ஆட வைப்பார்.

இன்று -
விடுதலைத் தீயைச் சுற்றித்
தறுதலைக் கூட்டம் நின்று
குளிர்தனைக் காய்ந்து கொண்டு
குளறுது
நரிகள் போல -
குதறுது
மானுடத்தை !

பேடிகளாகி விட்டோம்
பேய்களை ஆட விட்டோம்
நோய்களைச் சேர்த்து நின்று
நொய்ந்து நாம்
நொடிந்து போனோம்
உபாதைகள் மேவி நின்ற
பாதையில் வந்து
நின்றோம்
பயணமும் நின்று போச்சு
பணிகளும் நின்று போச்சு
நல்லதைச் சொன்னோர்- மேலும்
அல்லதைத் தடுத்து நின்றோர்
கல்வியால் மேவி நின்றோர்
செவியால் சாடி நின்றோர்
உள்ளதை நண்பர் கிட்டே
உவந்து நல் வாதஞ் செய்தோர்
பெண்டிரோ பிள்ளையோ-வெறும்
பித்தனோ - பக்தனோ - தெரு
ஆண்டியோ நொண்டியோ
அவன் -
அன்றைக்கே கைதியானான்
அவன் -
கதையதோ இருண்ட வீடு
கல்லறையோ உறங்கும் வீடு
விடுதலை இதுவா........
கேடு.................

துப்பாக்கி மனிதன் வாழும்
சுதந்திர பூமி ஈழம்
எப்போதும் விடுதலைக்காய்
எதையெதையோ பேசுவார்கள்
தப்பென்றால் எவன் தலையும்
தவறாது உருளும்
இன்று -

அப்போதைக் கெவன் ஒருவன்
அதிகாரம்
பற்றி நின்றால்
தப்பாது
துதிகள் பாடி
தலைவனாய்
ஏற்றிப் போற்றி
நிற்பதே நன்று ; நீ
வேறாய் நிற்பது நன்றே யன்று
நினைப்பிலே இதனை நீயும்
நிறுத்துவாய் தொண்டா
இன்று.

பெருமைகள் தாங்கி
வீரப்
பேரணி சென்ற பாதை
சிறுமைகள் சேர்ந்து - தீர்ந்து
வெறுமைகள் சேர்ந்த
தையோ !

விடுதலை விருட்சங்களை
வெட்டியே வீழ்த்திவிட்டு
வேரையும் விழுதினையும்
விறகுக்காய் எடுத்துச் சென்று
எரித்தழித்தார்கள்
ஐயோ
இதயமே வேகு
தையோ !

எரிந்தனர் எமது மைந்தர்
மரித்தது ஈழத் தாகம்
மறைந்தது மனித நேயம்
மன்பதை மலர்கள் மீண்டும்
மலருமோ இந்த
மண்ணில்.............?

விடுதலைக்காக
வீங்கிய புஜங்கள்
ஏங்கிய நெஞ்சங்கள்
தாங்கிய சுமைகள்
முழங்கிய உதடுகள்
ஓடிய கால்கள்
சிந்திய இரத்தங்கள் அனைத்தும்
வெட்கித் தலை குனிந்து
வீட்டுக்குள் கிடந்தன
வெளியே வரவில்லை.
அரவணைத்தது -
பொறுமை பொறுமை பொறுமை
கண்டது
வெறுமை வெறுமை வெறுமை
பெற்றது
சிறுமை சிறுமை சிறுமை

வெய்யிலும் காயுது
வயிறும் காயுது
பஞ்சம் மேவிப்
பட்டினி சேருது
அநாதைகள் அகதிகள்
அன்றாடம் பெருகுது
தலைகள் சாயுது
விலைகள் உயருது.

சந்தியில் - மூலையில்
தனியொரு ஆள் நின்று
பங்கீட்டுப் பொருட்களை
பார்வைக்கு வைக்கிறான்
சீருடை தரித்தவன்
காவலில் நிற்கிறான்
விற்பனை தொடங்குது

சீனியும் பாணும்
மாவும் மண்ணெண்ணெயும்
புலிகள் கைப்பற்றி
புறநகரில் விற்கின்றன
விலைகளோ மும்மடங்கு
சீனி அறுபது மண்ணெண்ணெய்
அறுபது
அரிசி முப்பது பெற்றோல்
நூற்றியெண்பது
பாண் றாத்தல் பன்னிரண்டு

இதில் வரும் லாபங்கள்
இன விடுதலைக்குத்தானாம்
எவரும் பேசாதீர்
இந்த விலை விற்கையிலே
எவன் வயிறு நிறைவாகும்
பட்டினி....சாவு......நோய்கள்
பலவுமே தோன்றுமென்றால்
புலிகளா சாவது ஏன் ?
நீங்களும் சாகலாமே
இரண்டு லட்சம் மக்கள்
இறந்து முடிந்த பின்னரே தான்
சுதந்திரத்தின் முதற் படிக்கல்
தோன்றுமாம்
மாற்று ஐயா சொன்னார்
கேள் , மிரளாதே
காதில் போடு

இன்று -
வீடு நோக்கி ஓடுகின்றேன்
விடுதலைக் கொடியை
விட்டெறிந்து விட்டேன்
எதிரிக்குப் பயந்தல்ல
நான் -
இனிமேல்
விடுதலை பற்றிப் பேசக்
கூடாதாம்.

நாளை -
காட்டுக்கு ஓடுகின்றேன்
வீடும் வேண்டாம்
விடுதலையும் வேண்டாம்
ஓடி ஒழித்துக்கொண்டால்
ஒரு காலம் வந்துவிட்டால்
மீண்டும் போராடி
மீட்கலாம் எமது மண்ணை
இப்போது
என் செயல்கள் எல்லாம்
துரோகமாம்.
நானோ ஆட்டுக்குட்டி
ஓநாய் சொல்வதை
ஒப்புக்குக் கேட்டிடுவேன்.

நானும் பிள்ளைகளும்
ஓடியே ஆகவேண்டும்
இன்றைக்கே ஓடவேண்டும்
இன்று தவறவிட்டால்
என்றும் ஓடேலாது
விஸா 'கியூ' வில் நிற்பது
விஷப் பரீட்சை
அது வேண்டாம் - விஸா
தருவானோ என்னவோ ?

தம்பியின் மருமகனின்
தமையனின் பெண்சாதி
எட்டுப்பிள்ளை பெற்றவள்
விதவை
இப்போதுதான் கடன் வாங்கி
சவுதிக்குச் சென்று விட்டாள்
பிள்ளைகள் என் பொறுப்பு
ஒருமுறை என் பேரில்
காசு கொஞ்சம் அனுப்பி
வைத்தாள்
பிள்ளைகளின் செலவுக்கு
ஊரெல்லாம் அது தெரியும்
அதனாலே பத்துப் பவுண்
குறையாமற் கேட்பார்கள்.

மாதர் சங்கக் கட்டிடத்தை
கட்டித்தர யாருமில்லை
என்று பலர் கத்தியதால்
மருமகன் கையேற்று
கட்டிடத்தைக் கட்டியதால்
ஒரு லட்சம் கேட்டார்கள்
ஓடிவிட்டான் கொழும்புக்கு ;
அவன் சார்பில்
ஐம்பதாயிரம்
நான் கொடுக்கவேண்டிவரும்.

இதைவிட இன்னும்பல
சங்கதிகள் இருக்கிறது
என் விஸாவைத்
தடுப்பதற்கு.

பெரியப்பா ஒருவர்
ஓட்டை லொறி வைத்திருந்தார்
பங்கருக்கு மண்ணேற்ற
பலமுறைகள் உதவி செய்தார்
பத்தாது என்று
பணமுடிப்பும் கேட்டார்கள்
லொறியை விற்றுவிட்டு
ஆளோ தலைமறைவு.

இத்தனைபேர் காரியங்கள்
நான் செய்து வைத்தவையாம்
என் சொல்லை எவன் கேட்பான்
தான் தான் நினைத்தபடி
தலைகளைத் தப்ப வைக்க
மாட்டியது நான்தான்.

எனது மகன்
மூத்தவன்
எங்கோ போய் சென்றுவர
'விடுதலை'ப் பத்திரிகையை
விலைக்கெவனோ விற்றுவிட்டான்
சோறுகட்ட உதவுமென்று
வீடுவந்த 'விடுதலை' யை
நேரில் கண்ட அயலவர்கள்
மாறி மாறி சொல்லி வைக்க
வைத்த விசாரணைகள்
பத்துவரை தேறும்
இன்னும் முடியவில்லை
என் மகனைப் போவதற்கு
எப்போதும் விடமாட்டார்கள்
இப்போதே புறப்படுங்கள்
காட்டுக்குப் போவதற்கு

நான் -
வாய் திறந்து பேசலாம்
வானத்தையும் பார்க்கலாம்
மனிதநேயம் காணலாம்
இடியோசை இல்லை
அடாவடிகள் அங்கில்லை
'ஓம் நாராயணா நம'
யாரோ வருகிறார்கள்
புலிகள் போலத் தெரிகிறது
வாயை மூடிக்கொள்
' இரணியனோ நம '
' இரணியனோ நம '
' இரணியனோ நம '

ஞானி

## சென்னையில் நகைக்கடை கொள்ளை

## புலிகளின் கைவரிசை

தமிழ்நாடு சென்னை பாண்டிபஜாரில் உள்ள நகைக்கடைஒன்றை கொள்ளையடிக்க புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி அயலவர்களினால் முறியடிக்கப்பட்டது. கடை மூடப்படும்வேளையில் உள்ளேபுகுந்த நான்குபுலிகள் கடையின் கதவுகளைப் பூட்டிவிட்டு உரிமையாளரை கூரிய ஆயுதங்களைக்கொண்டு கொலைசெய்துவிட்டு நகைகளைக் கொள்ளையடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். கடைக்குள் சத்தம்கேட்ட அயலவர் கடைக்குவெளியே பூட்டு போட்டுவிட்டு பொலிசாருக்கு அறிவித்ததைத்தொடர்ந்து புலிகள் கைதாகினர்.

www.padippakam.com



# தோழர்களின் நினைவுகளில்....

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தோழர் யோகசங்கரி அவர்கள் 1990.06. 18ந் திகதி பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் ஆற்றிய உரையே அவரது கடைசிப்பேச்சாகும். 1990.06.19 மாலை சென்னையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி எமது செயலாளர் நாயகம் பத்மநாபா அவர்களுடனும் மற்றும் 11 தோழர்களுடனும் மரணிக்கு முன்பாக 18ந் தேதி பாராளுமன்றத்தில் ஆற்றிய அவரது இறுதி உரையிலிருந்து........



எம்மைப்பொறுத்தவரையில், இன்றுநடைபெறும் இந்தயுத்தம் தமிழர்கள் மத்தியிலிருக்கும் ஒரு பாசிசக்கும்பலுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் ஒரு யுத்தம் என்பதை நான் எம்முடைய மக்களுக்கும் இந்தநாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்துக்கும் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

எம்முடைய மக்களில் ஏறக்குறைய எண்பது சதவீத மக்கள் இந்தப் பாசிசவாதிகளின் போக்கை எதிர்க்கின்றார்கள் என்பதுடன், அந்தப் பாசிசவாதிகளால் தாம் அனுபவித்து வரும் துன்பம் எப்போது முற்றுப்பெறும் என்ற ஆவலுடன் எதுவித உதவியுமின்றி இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த அரசினாலோ, அரசஇயந்திரத்தினாலோ சில அரசியல்வாதிகளினாலோ திட்டமிட்டபடி பொதுமக்கள் தாக்கப்படுவார்களேயானால் அதைப் பார்த்து நாம் பேசாமடந்தையாக இருந்துவிட முடியாது.

தமிழ்பேசும் மக்களைப் பகடைக்காய்களாகப் பாவித்து உங்களுடைய பிற்போக்குவாதத்தை நிலைநாட்ட விரும்புவீர்களேயானால், அதன் மூலம் ஏற்படும் கஷ்டங்களை எதிர்கொள்ளப் போகிறவர்கள் நீங்கள் தாம் என்பதை மறந்து விடாதீர்கள்.

திரிகரணசுத்தியுடன் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்புவீர்களேயானால் இந்நாடு ஒரு "PARADISE OF THE INDIAN OCEAN" என்ற கூற்றை உண்மையாக்கிவிடும். தவறின் விமோசனம் இல்லையென்றே கூறலாம்.

"சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது" என்று கூறுவார்கள். ஆனால் நீங்கள் அடுப்புச்சூட்டையல்ல புலிகளின் துப்பாக்கிச்சூட்டைக் கண்டபின்பும் மீண்டும் புலிகளுடன்சேர்ந்து ஜனநாயக சக்திகளை நசுக்குவீர்களேயானால் இந்த நாட்டைக் காப்பாற்ற எச்சக்தியாலும் முடியாது என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எமது செயலாளர் நாயகம் அவர்கள் கூறியது போல தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல் சக்திகளின் பரந்துபட்ட பகுதியினரை உள்ளடக்கியதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு நாம் வேண்டுகிறோம். இதுவரைகாலமும் நடத்திய சதித்திட்டங்கள் உள்ளடக்கிய பேச்சுவார்த்தைகளுக்கு அப்பால் சென்று எமது 19 அம்சத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட சகலருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டுமெனச் சகலரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

மீண்டும் நான் இங்கே வலியுறுத்துவது என்னவென்றால், அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்பதுதான்.

# வாசகர் பார்வையில் ★ ★ ★ ★ ★ ★ ★

தங்கள் "புதியபார்வை" பத்திரிகையின் பார்வை -3, பார்வை -4, ஆகியவைகளைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அதில்பார்வை நாலில்வந்த கடிதங்களில் சுகந்தன் என்ற வாசகர் பேலினில் இருந்து திரு ராஜீவ்காந்தி அவர்களைச் சாடி எழுதியிருந்தார். அவைபற்றி வாசகர் என்றமுறையில் ராஜீவ்பற்றிய எனது பார்வையையும் சிலவரிகளில் எழுதலாம் என்று நினைக்கிறேன்.

சுகந்தன் தனக்கு அந்தக்கட்டுரையில் (பார்வை-3இல்வந்த "அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே" எனும்கட்டுரை) முரண்பாடுகள் உள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால் ராஜீவின் கடந்தகால செயற்பாடுகள்பற்றிய அவரது முரண்பாடான கருத்துக்கள் யாவும் மொட்டையாக எந்தவித ஆதாரமுமின்றி ஏதோ ராஜீவை படிக்காதவன்போல் அவரில் வசைமாரி பொழிந்துள்ளார்.

என்னைப்பொறுத்தவரையில் ராஜீவ் காந்திபற்றி அக்கட்டுரையில் கூறியயாவும் மிகமிகச்சரியானவையே. அவற்றை நான் திரும்பஎழுதி வாசகர்களை போரடிக்க விரும்பவில்லை. ஈழப் போராட்டத்தில் ராஜீவின்பங்குபற்றி ஆழமாக ஆய்வுசெய்தால் அவர் உலகில் எந்தநாடும் செய்யாத அளவிற்கு எமது போராட்டத்துக்கு உதவியுள்ளார் என்பது தெரியவரும். சுகந்தனின் கடிதத்திற்கு பதில் அப்படியான ஆய்வாகத்தான் இருக்கமுடியும். அதை நீங்கள் தொடர்ந்து செய்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

ஆனால் மேலோட்டமாக அக்கட்டுரை சம்பந்தமான சுகந்தனின் முரண்பாட்டைப்பார்ப்போம். சொந்த நாட்டு மக்களை நேசிக்காதவர், அவர்களின் பிரச்சனையைத் தீர்த்துவைக்காதவர் எப்படி ஈழத்தமிழரை நேசித்தார், பிரச்சனைகள் தீர்க்க முற்பட்டார் என்பது வேடிக்கையானது எனக்கூறியுள்ளார். இவரதுகூற்று சரியாகஇருந்தால் ராஜீவ் முதலாவது தேர்தலில் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களைபெற்றிருக்கமுடியாது. அதோடு இரண்டாவது தேர்தலிலும் எல்லாக்கட்சிகளை விடவும் கூடுதலான இடங்களில் வெற்றி பெற்றதோடு மட்டுமல்ல அவர் இந்த ஆண்டு நடந்ததேர்தலில் திரும்பவும் அவர்பிரதமராக வரக்கூடிய அளவுக்கு மக்களாதரவைப் பெற்றிருந்தார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அடுத்து ராஜீவ் இலங்கையை தமது ஆதிக்கத்துள் வைத்திருக்கத்தான் தமிழர்கட்கு உதவியதாக இவர் கூறுவதைப் பார்த்தால் ராஜீவ் எமக்கு ஈழம் எடுத்துத்தருவதாகக் கூறி ஏமாற்றி விட்டார் என்ற பாணியில்தான் இவரது ராஜீவ்பற்றிய விமர்சனம் உள்ளது. ஆனால் இந்தியா எமக்குஉதவும் அதே சமயம் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் உலகநாடுகள் தளம் அமைக்கமுயல்வதை தடுக்கமுனைவதில் என்ன பிழையிருக்கிறது என எனக்குவிளங்கவில்லை தனிப்பட்ட ராஜீவைப்பார்த்தால் அவரது ஐந்துவருடஆட்சியில் எத்தனையோ ஆயிரம்பேர் கொல்லப்படக் காரணமாய் இருந்தாராம். இதில் ஏன்தனிப்பட்ட ராஜீவாகப்பார்க்க வேண்டும் என எனக்கு விளங்கவில்லை. தனிப்பட்ட ராஜீவ் என்றால் எந்தவித அரசியல் நிலையுமற்ற தனிமனிதனாக நின்று கொலைசெய்திருந்தால் சுகந்தனின் கூற்றுசரியாகலாம். ஆனால் ராஜீவின் ஐந்துவருடம் நடந்த விடயங்கள் நல்லதோ கெட்டதோ இந்தியஅரசினுடையதே தவிர ராஜீவினுடையதல்ல. அவரது உதாரணங்களைப் பார்த்தால் அதுமிக வேடிக்கையாகவே உள்ளது. போபாலில் மட்டும் 10,000 ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்களாம் (இந்தத்தொகை சரியானதல்ல) இக்கொலைக்கும் ராஜீவுக்கும் என்ன சம்பந்தம் போபால் இரசாயனத் தொழிற்சாலையின் கவனிப்புப் பிழையானதால்தான் நச்சுவாயு வெளியேறி சுற்றாடலில் இருந்தமக்கள் இறந்தார்களேயொழிய அவர்கள் யாராலும் கொல்லப்படவில்லை. சுகந்தனின் கணிப்பின்படி பார்த்தால் ராஜீவ் காந்தி போபால் இரசாயனத்தொழிற்சாலையில் நச்சுவாயுவைத் திறந்துவிட்டு 10,000 பேரை கொன்றுகுவித்துள்ளாரா?

அதுமட்டுமல்ல அந்த இறந்தவர்கட்கு கிடைக்கவிருந்த நஷ்டஈட்டை சுருட்டினாராம் இதற்கு என்ன ஆதாரம். ராஜீவ் என்ன பிச்சைஎடுத்துக் கொண்டுதிரிந்தாரா இப்பணத்தை சுருட்டிக்கொள்வதற்கு. உண்மையில் இறந்தவர்களின் குடும்பங்கட்கு கூடுதலான நஷ்டஈடு கிடைக்கப்பாடுபட்டாரேதவிர அவருக்கு அதைச்சுரண்டவேண்டிய அவசியம்என்றும் இருந்ததில்லை

பஞ்சாப்பில் பலஆயிரம் சீக்கியப் பொதுமக்கள் கொல்லப்படக் காரணமாயிருந்தாராம். பஞ்சாப்பிரச்சனையில் பல சீக்கியப் பயங்கரவாதிகள் பஞ்சாப் பொற்கோவிலில் கொல்லப்பட்டதும் உண்மையே. இது இந்திராகாந்திகாலத்தில் இந்தியஅரசின் முடிவின்பேரால் நடந்த ஒருசம்பவமே. ராஜீவின் காலத்தில் ராஜீவின் தனிப்பட்ட கட்டளையால்நடக்கவில்லை என்பதை சுகந்தன் உணரத்தவறிவிட்டார். ஆனால் கூடிய பொதுமக்கள்தான் பஞ்சாப்பயங்கரவாதிகளால் கொல்லப்படுகிறார்கள் இந்திராகாந்தியே தனது காவலுக்கு வைத்திருந்த சீக்கியனால்தான் கொல்லப்பட்டார்.

சுகந்தனின் கருத்துப்படி கூறினால் ராஜீவ் தனக்கென ஒருபடையைவைத்து தனக்குப்பிடிக்காத இன மக்களை கொல்வதுபோல் புலம்பியுள்ளார். பஞ்சாப்பாக இருந்தாலும்சரி, காஷ்மீர் அசாம்ஆக இருந்தாலும்சரி நாட்டைத் துண்டுபோடமுனையும் பயங்கரவாதிகளின் பயங்கரவாதத்தை இந்திய அரசு முறியடிக்கமுனைகிறது. அது ராஜீவ்காந்தி காலத்துக்கு முன்பும் நடந்தது. ராஜீவ்காந்தி காலத்துக்கு பின்னும் நடைபெறுகிறது.

எனவே இது ஒருநாட்டின் அரசியல் முடிவே தவிர தனிப்பட்ட ஒருவரின் முடிவல்ல என்பதை சுகந்தன் போன்றோர் உணரவேண்டும்.

ராஜீவ் தனது இத்தாலிய நண்பர்களுடன் சேர்ந்துசெய்த ஆயுதவிற்பனைகள் ஊழல்கள் எத்தனைஎனக்கூறும் இவர் இதைப்பற்றி ஏன் ஆதாரத்தோடு எழுத முடியவில்லை. ராஜீவ் யாருக்கு ஆயுதம் விற்றாரோ, வாங்கினாரோ (இந்த ஆயுதவியாபாரப் பிரச்சனை இந்திய பாதுகாப்பு மந்திரியுடனானதே தவிர ராஜீவினுடையதல்ல) அந்த ஊழல் கதையைவைத்து பதவிக்குவந்த வி. பி. சிங் ராஜீவின் ஊழலைக்கண்டுபிடித்து ஏன் மக்கள்முன் ராஜீவின் குற்றங்களை சமர்ப்பிக்கவில்ல. உண்மையில் ராஜீவிற்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. முடிந்தால் ஆதாரங்களோடு சுகந்தன் இவற்றை எழுதட்டும் பார்க்கலாம்.

பாபர் மசூதிப்பிரச்சனையில் குளிர் காய்ந்தது, காய்வது யார்? ராஜீவா? அத்வாணியா? அக்கட்டுரையில் எழுதப்பட்டயாவும் ஒருகண்மூடித்தனமான வர்ணனையே எனமுடித்துள்ளார்.

ஆனால் இவர்தான்(சுகந்தன்) ராஜீவைப் பற்றி ஒழுங்கான ஆய்வெதுவுமின்றி, ஓர் உலகத்தலைவரை ஈழத்தமிழர் நிலைமையை உலகுக்கு உணரவைத்த உன்னத தலைவரை கண்மூடித்தனமாகவசைபாடி விமர்சித்துள்ளார்.

ஈழப்போராட்ட வரலாற்றில் ராஜீவின் முக்கியபங்கை யாரும்மறுக்கவோ மறைக்கவோ முடியாது. திருமதி இந்திராகாந்தியைத் தொடர்ந்து ராஜீவ் பிரதமராக இருந்தகாலத்தில் எடுத்த முடிவுகளாலேயே ஈழப்போராட்டம் உலகுக்கு தெரியக்கூடியதாக மிகக் குறுகியகாலத்துள் வளரக்கூடியதாக இருந்தது. இதுபற்றிய (புதிய பார்வையின்-3, "அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே) கட்டுரையைத்தான் கண்மூடித்தனமான வர்ணனை என சுகந்தன் கூறியுள்ளார்

திரு ராஜீவ் அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சனையில் இலங்கை இந்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைச் செய்தார். அதன் முடிவில் இலங்கை ஆயுதப் படையின் துப்பாக்கி அடிக்குஆளானார் பின்னர்செய்துகொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இந்திய அமைதிப் படையைஅனுப்பினார். அதோடு வடகிழக்கு இணைந்த தமிழர் ஆட்சியை உருவாக்கினார். இவையாவற்றையும் எமது பொதுஎதிரியான ஸ்ரீலங்கா அரசோடு இணைந்து புலிகள் இல்லாமல் செய்தனர். அமைதிப்படையை திருப்பி அனுப்பக்காரணமாயிருந்தனர். கடைசியில் எமது ஈழப்போராட்டவரலாற்றில் முக்கிய பங்காற்றிய உன்னத தலைவனான திரு ராஜீவ் அவர்களை அவரிடம் மற்றைய இயக்கங்களை விடவும் கூடுதலான சலுகைகளைப்பெற்ற புலிகள் இயக்கத்தினர் படுகோரைத்தனமான முறையில் படுகொலை செய்து வெற்றிவிழாக்கொண்டாடினார்கள். எனவே கடைசியாகக்கூறினால், ஈழத்தமிழர்கட்கு எந்தநாடும் செய்யாதஅளவில் மிகப்பெரும் உதவிகளைச்செய்யக் காரணமாயிருந்த திரு ராஜீவ்அவர்களை எந்தவிதநன்றி உணர்வுமின்றி புலிக்குழுவினர் கொன்றொழித்தனர். ஆனால் சுகந்தனுக்கு ராஜீவை பிடிக்காதது ஏனோ?

நன்றி

(கபூர் - லண்டன்.)

## புதிய பார்வை ஆசிரியர்குழுவினருக்கு

"புதிய பார்வை" உங்கள் கட்சிப் பத்திரிகை ஆகையால் சுகந்தனின் கடிதங்கள் மாதிரியானவைகளை பிரசுரித்து ஏன் பிரச்சனையை விலைக்கு வாங்குகிறீர்கள். இப்பத்திரிகை பல விதத்திலும் உங்கள் கட்சியை வளர்ப்பதாகவே இருத்தல் அவசியம். சுகந்தனின் கடிதத்திற்கு நானும் ஓர் வாசகர் என்றமுறையில் பதில்எழுதியுள்ளேன். சரியெனப்பட்டால் பிரசுரிக்கவும்.

(கபூர் - லண்டன்.)

புதிய பார்வை பற்றியவிமர்சனங்களை எழுதும் சுதந்திரம் வாசகர்களுக்கு உண்டு. வாசகர்களின் கருத்துக்களை மழுங்கடிப்பது, பிரசுரிக்காமல் விடுவது, கருத்துச்சுதந்திரத்தை தடை செய்து நாம் சொல்வது மட்டும்தான் சரியெனத்திணிக்கும் சர்வாதிகாரப் போக்காகும். சுகந்தனின் கருத்துக்களை பிரசுரித்ததன்மூலம் உங்களைப் போன்ற வாசகர்கள் உஷார் அடைந்து பலவிடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளீர்கள். இவை பலருக்கு பலதெளிவுகளை உண்டாக்கும்.

(ஆசிரியர்குழு.)

படிப்பகம்

பல்கலைக்கழக ஆசிரியர்கள் மனித உரிமைகள் (யாழ்ப்பாணம்) அறிக்கை

# 3 அரசியல் அழிவுகளும் மனித சோகங்களும்

மனிதஉரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு (யாழ்ப்பாணம்) 04.02.1991.ல் அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற அழிவுகள், அரசபயங்கரவாதம், இயக்கங்களின் அராஜகநடவடிக்கைகள் போன்றவற்றை படம்பிடித்துக் காட்டியுள்ள இவ்வறிக்கையை தொடர்ச்சியாக இங்கே பிரசுரிக்கவுள்ளோம்.

ஆனால் இவர்கள்இன்றைய நிகழ்வுகளில் இருந்து விலகிக்கொள்ள நேர்ந்தமைக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஒரு புதிய சரித்திரத்தைப் படைக்கும் வகையில் ஏனையோருக்கும் வழி காட்டுவார்களானால் அது ஆக்கபூர்வமானதாக இருக்கும். இது ஆரோக்கியமான ஒரு சூழலை உள்ளூரில் ஏற்படுத்தும்.

நாம் இப் போராட்டத்தை இலங்கையின்வரலாற்று அடிப்படையில்நோக்கி நடுத்தர வகுப்பு தமிழ் மக்களிடையே குறிப்பாக வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களிடையே நிலவிவரும் சில ஆதாரமற்ற நம்பிக்கைகளை உடைத்தெறிவது அவசியம். இங்கு சில விடயங்களை நாம் குறிப்பிட்டு சில கேள்விகளை எழுப்பவிருக்கிறோம்.

பெரும்பான்மை சிங்களசமூகம் குறுகிய தேசியவாத அரசியலில் மூழ்கியபோது சமுதாயமொன்றை கட்டியெழுப்பும் நடைமுறை உள்ளூர் தகர்ந்து போகத் தொடங்கியது. இதே குறுகிய கொள்கையையே சில வித்தியாசங்களுடன் சிறுபான்மை அரசியல் வாதிகளும் கடைப்பிடிக்கத் தொடங்கினர். இதன் காரணமாக அவர்கள் தமது அரசியல் எதிர்காலத்தின் பொருட்டு தாமே தாம் ஏற்படுத்திய அரசியல் சூழலில் சிக்கிக் கைதிகளாயினர்.

சில தமிழ் குழுக்கள் சிங்கள பேரினவாதத்துக்கு மாற்றாக சில நடவடிக்கைகளை அறிமுகம் செய்தன. ஆனால்

கின்றனர்.

அதாவது தமது போராட்டம் எம் மக்களை பற்றியதாக இருக்கிறதோ அம்மக்களைக் காப்பாற்ற வேண்டியது போராளிகளின் கடமை. விடுதலைப் போராட்ட வீரரைக் கண்டதும் மக்கள் நம்பிக்கையும் தமது சக்தியை உணர்வதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு இப்போராட்ட தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் இரண்டாவது அம்சத்தை எடுத்துக் கொண்டால் நமது போராட்டத்தில் மக்கள் சிறுமைப் படுத்தப்பட்ட பிரயோசனமற்ற நிலையில் இருந்து வருகின்றனர். பல சந்தர்ப்பங்களில் போராளியின் பிரசன்னம் அச்சத்தையே ஏற்படுத்துவதாக உள்ளது. போராளியின் செய்கை எதிர்தரப்பைத் தூண்டச்செய்து தமது அழிவுக்கு அது காரணமாக அமையுமோ என மக்கள் அச்சம் கொள்கின்றனர். பெண்களும் பிள்ளைகளும் கூவிக் குளறியபடி தப்பியோடுவதையும், மக்கள் வாய்மூடி மௌனிகளாக நடைபெறப்போகும் சம்பவங்

திருப்திப்பட்டுக் கொள்ள முடியும். ஆனால் கிழக்கில் மக்கள் இராணுவ மற்றும் அதிரடிப்படையினரால் பெரும் இன்னல்களை அடைந்து வருவதை மறந்து விடுவதற்கில்லை. இம்மக்களின் துன்பங்களின் பின்னணியில் உள்ள அரசியல் தான் என்ன?

த்தியிருக்க முடியும் அல்லவா? அல்லது இப்போது காலங்கடந்திருந்தாலும் தவறை ஏற்றுக்கொண்டு யுத்த நிறுத்தத்தின் ஒரு அங்கமாக இத் தவறை இழைத்தவர்கள் மீது ஒழுங்குநடவடிக்கை எடுத்திருக்கலாம்.

போராளிகள் இது ஒரு இறுதி யுத்தம் என மக்களிடம் கூறினர். ஆனால் கல்முனையிலோ படைவீரர்களின் சடலங்களை வீசி எறிந்து இராணுவத்தினரின் கோபத்தைத் தூண்டிவிட்டனர். இராணுவம் மக்கள் வாழும் பகுதியை நெருங்கிக்கொண்டிருக்கும் போது நிலக்கண்ணியை வெடிக்கச்செய்து விட்டு ஓடி மறைந்து விட்டனர். மக்களே ஒரு பக்கத்து இறுதி சண்டையைச் சந்திக்க நேர்ந்தது. கண்ணியமற்ற இராணுவத்

**எமது சமூகத்தில் ஒற்றுமை இல்லாமல் போனது கண்கூடு. யுத்தத்தை எடுத்துக் கொண்டால் துப்பாக்கி ஏந்துவதையும், கொலைத்திறனையும் தவிர வேறு எதைத்தான் நாம் படைத்திருக்கின்றோம். இது விடுதலை இராணுவமா அல்லது கொலை இயந்திரமா?**

வெளிநாட்டு செய்தியாளர்களை கிழக்கின் சில பகுதிகளுக்கோ அல்லது மட்டக்களப்பின் சுற்றுப்புறங்களுக்கோ அழைத்துச்சென்று இப்பிரதேசம் விடுவிக்கப்பட்டிருப்பதாக காட்டிக்கொள்வது ஒன்றும் சிரமமான காரியமன்று. ஆனால் உண்மை நிலை என்ன? வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ஒரு குடிமகனின் வீட்டையாவது பாதுகாக்கக் கூடிய திடமோ திறமையோ உண்மையாகவே உள்ளதா?

யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் இரு தடவைகள் இராணுவம் பதிலடிகொடுக்கும் முகமாக நுழைந்ததை நாம் சுலபமாக மறந்து விட்டோம். மேலும் தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயும் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

உண்மை நிலையை நன்கு ஆராய்வோமானால் மேலும் பல உண்மைகள் வெளிவரும். உயர்மட்ட தமிழர்களை வெளிநாட்டவர் பேட்டிகாணும்போது இலங்கைத் தேயிலையை அருந்தவேண்டாம். அது தமிழர்களின் இரத்தம் என்று சொல்லுவார்கள். அவர்கள் சிங்கள மக்களைப்பற்றி கீழ்த்தரமாகக் கதைப்பார்கள். குடியேற்றம் மற்றும் அரச வன்முறை காரணமாக கிழக்கிலங்கை மக்கள் பெரும் துன்பம் அனுபவித்து வருகிறார்கள். என்று கூறும் அவர்கள் மலையக தமிழர்களின் நிலை பற்றியும் பேசுவார்கள் ஆனால் இத் தமிழ் மக்களின் உண்மையான பிரச்சனைகள்பற்றி பேசப்படுகிறதா?

கிழக்கிலங்கைத் தமிழ் மக்களும் மலையகத் தமிழர்களும் ஏன் சில சமயம் முஸ்லீம்களும் கூட யாழ்ப்பாணத்தவர்களின் உள்ளத்தில் தோன்றும் அரசியல் வழிமுறைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளனர் என்ற உண்மைக்கு நாம் முகம் கொடுக்கவேண்டும். இப்போது கிழக்கின் இராணுவ நடவடிக்கை பற்றி பார்ப்போம்.

தின் மீதான கிழக்கிலங்கை மக்களின் ஆத்திரத்தைப் பயன்படுத்தி புதிய போராளிகளைத் திரட்டும்உத்தியென இதை வர்ணிக்கலாமே. மேலும் இப் புதிய போராளிகள் எப்படிப் பயன்படுத்தப்பட்டார்கள். தமது சொந்த பூமியை விடுவிப்பதற்குப் பதிலாக அவர்கள் யாழ்ப்பாணத்தில் போராடுவதற்குப் பயன்படுத்தப்பட்டனர். எமது அரசியல் கிழக்கிலங்கையில் மிகத் தரந்தாழ்ந்து போனதால் முஸ்லிம் மக்களை தமிழர்கள் மீது திருப்பிவிடும் செயலை மேற்கொள்வது அரசாங்கத்துக்கு சிரமமானதாக இருக்கவில்லை. பின்னர் இரு சமூகத்தினரையும் காக்கவும் அரசாங்கம் முற்பட்டது.

இப்போது யுத்த நிறுத்தம் தொடர்பாக மீண்டும் கதைக்கப்பட்டு வருவதால் இப் பிரச்சனையின் முக்கிய பகுதிகளை நாம் பார்க்கவேண்டும். விடுதலைப் புலிகள் முன்னர் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது மக்களைப்பற்றியல்லாது தமது அதிகாரங்கள் குறித்தே உரையாடினர். பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே புலிகள் இராணுவ ரீதியாகத் தம்மைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டனர். ஆயிரக்கணக்கான சிறுவர்கள் போராட்டத்துக்கு திரட்டப்பட்டனர். ஆனால் சாதாரண மக்கள் சமாதானத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரம் அது. விடுதலைப்புலிகள் மேலும் ஆள் திரட்டும் நோக்கத்துடன் இளைஞர்களைக் கவரும் விதத்தில் சொற்பிரயோகங்களை உபயோகித்தனர். தற்போதைய சூழல் தற்காலிகமானதென்றும் தமது உண்மையான இலட்சியம் தமிழ் ஈழமே என்று புலிகள் தெரிவித்தனர்.

**விடுதலைப்புலிகள் முன்னர் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது மக்களைப்பற்றியல்லாது தமது அதிகாரங்கள் குறித்தே உரையாடினர். பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே புலிகள் இராணுவரீதியாகத் தம்மை பலப்படுத்துவதில் ஈடுபட்டனர். ஆயிரக்கணக்கான சிறுவர்கள் போராட்டத்திற்கு திரட்டப்பட்டனர். ஆனால் சாதாரண மக்கள் சமாதானத்தையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரமது.**

அவர்களால் தமது முயற்சியில் வெற்றி காண முடியாதுபோயிற்று. அவர்கள் விதித்துக்கொண்ட கட்டுப்பாடுகள் மற்றும் குறுகிய தேசியவாதம் இதற்குக் காரணமாயிற்று. அரசியல்வாதிகள் உண்மைப் பூர்வமாகத்தான் செயல்படுகிறார்களா? என்றகேள்வி எழுந்தபோது அவர்களுடைய வேஷங்களும், உண்மை நிலைக்கும்,வாய்ப்பந்தல்களுக்கும் இடையிலான வித்தியாசங்களும் வெளியே தெரியவந்தன. தீவிரவாதிகளின் போராட்டம் இவ்வாறான அரசியலில் பெரிதுபடுத்திக் காட்டப்பட்டது. ஆனால் அரசியலில் காணப்படும் சர்வாதிகார மனப்பான்மை மற்றும் குறுகிய தேசியவாதம் ஆகியவை வெளிப்படுத்தப்படவில்லை. இதே சமயம் அரசியல்வாதிகளைப் போல வாய்ப்பந்தல் போட முற்பட்ட சில தீவிரவாதிகளின் முடிவு சாதாரண அரசியல் வாதிகளின் முடிவை விட மோசமானதாகவே இருந்தது.

இன்றைய பிரசங்க அரசியலை எடுத்துக் கொண்டால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் குறுகிய தேசிய வாதத்தை நாம் நன்கு அவதானிக்க முடிந்தது. இவ்வகை அரசியல் எவ்வளவுதூரம் தமிழ் பேசும் மக்களிடையே சமூக உணர்வை பலப்படுத்த உதவியது. கிழக்கில் தமிழர்களையும் முஸ்லீம்களையும் ஒன்று படுத்துவதற்கு பதிலாக இவ்வகை அரசியல் வடக்கிலும் கூட பிளவையே தோற்றுவித்தது.சுதந்திர போராட்ட அரசியலானது வெறுப்பையும் பிரிவுக்கான தூண்டல்களையும் உருவாக்க முடியுமா? நம்முடைய குறுகிய தேசியவாதத்தின் தத்துவார்த்த வளர்ச்சியின் பயங்கரத்தையே நாம் இன்று காண்கிறோம்.

இராணுவ ரீதியான விடுதலைப் போராட்டம் மாவோ, ஜெமில்லா கப்றால் போன்ற பெரும் தலைவர்களை உருவாக்கியது. நமது தலைவர்களும் இவர்களைப்பற்றி வாயளவில் பேசியுள்ளனர். இந்த விடுதலைப் போராட்ட தலைவர்கள் இரு முக்கிய உண்மைகளைச் சுட்டிக்காட்டியிருக்

களை எதிர்பார்த்திருப்பதையும் நாம் அவதானித்து வந்துள்ளோம். எமது சமூகத்தில் ஒற்றுமை இல்லாமற் போனது கண்கூடு. யுத்தத்தை எடுத்துக் கொண்டால் துப்பாக்கி ஏந்துவதையும் கொலைத் திறனையும் தவிர வேறு எதைத்தான் நாம் படைத்திருக்கிறோம். இது விடுதலை இராணுவமா அல்லது கொலை இயந்திரமா?

நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றவர்கள் தமது பிள்ளைகளுக்காகவே தாம் வெளிநாடுகளில் தங்கியிருப்பதாகச் சமாதானம் சொல்கிறார்கள். ஒரு பதினோரு வயது சிறுவனை அவனது பெற்றோரின் சம்மதமின்றி துப்பாக்கியுடன் திரியச்செய்வதில் பிரச்சினையை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இச்சிறுவர்கள் தாம் செய்யும் காரியம் பற்றி ஒன்றும் தெளிவான முடிவுகள் இல்லாதவர்கள். வெறும் இயந்திரங்கள் மட்டுமே. நல்ல சாப்பாடு கிடைக்குமானால் அவர்கள் திருப்தியுற்று விடுவார்கள். இச் சிறுவர்களது குறுகிய கால வீர வாழ்க்கை படுகாயங்களில் முடிவுறும் போது அதன் தாக்கத்தை தாங்கும் மனோ வலிமை இச் சிறுவர்களுக்கு உள்ளதா?

**நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றவர்கள் தமதுபிள்ளைகளுக்காவே தாம் வெளிநாடுகளில் தங்கியிருப்பதாகச் சமாதானம் சொல்கிறார்கள். ஒரு பதினொருவயதுச் சிறுவனை அவனது பெற்றோரின் சம்மதமின்றி துப்பாக்கியுடன் திரியச்செய்வதில் உள்ள பிரச்சனையை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.**

மக்களை விடுவிக்கும் இராணுவத்தீர்வு எப்படி செயல்படுகிறது என்று பார்ப்போம். கொக்காவில் மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் வெற்றி பிரமாதப்படுத்தப் பட்டது. யாழ்ப்பாணத்திலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் தமிழ் மக்கள் இவ் வெற்றிகள் குறித்து

தமிழ் மக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய கிழக்கில் ஏன் இந்தயுத்தம் தொடக்கப்படவேண்டும்? கிழக்கு தமிழ் மக்களின் நல்வாழ்வில் அக்கறையிருந்திருந்தால் சிறைப்பிடிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான பொலீசார் ஏன்கொல்லப்பட வேண்டும். இப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் பொலிசார் ஏன் கொலை செய்யப்பட்டனர்? இது ஒரு தவறான அணுகு முறையாக இருந்திருக்குமானால் சிறை பிடிக்கப்பட்ட பொலிசாரை தமிழ்மக்களின் பாதுகாப்பின் பொருட்டு பணயக்கைதிகளாகப் பயன் படு

இதே சமயம் தென்னிலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் ஒருபோதும் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை செலுத்தவில்லை. ஏதாவது நெருக்கடிகள் தோன்றும் போது இக் கட்சிகள் இராணுவத் தீர்வுக்கே ஆதரவளித்தன. அரசியல்வாதிகள் தமது பொறுப்புகளைக் தட்டிக்கழிக்கும் போதெல்லாம் அரசியல் வழிகாட்டலோ அல்லது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையிலோ வேறு அரசியல் வழிவகைகளோ அளிக்கப் படாத நிலையில் அங்கு இராணுவம் அனுப்பப் பட்டது.

இப்போது மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமானாலும் கூட தென்னிலங்கை அரசியல்வாதிகள் தீவிரவாதக் குழுக்களுடன் மட்டுமன்றி தமிழ் மக்களுடனும் உரையாடுவார்கள் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

விடுதலைப் புலிகள் சர்வதேச நாடுகளைத் திருப்திப்படுத்தும் முகமாகவே சமஷ்டி மற்றும் கனடிய அரசியல் அமைப்பு குறித்து பேசி வருவதாகத் தெரிகிறது. அவர்கள் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதை நியாயப்படுத்தும் பொருட்டு ராஜதந்திர இலாபங்களை எதிர்பார்த்துள்ளனர். எத்தனையோ உயிர்களைப் பலிகொடுத்து இச் சமூகத்தை வீழ்ச்சியின் எல்லைக்குக் கொண்டு வந்தது நியாயந்தானா என்ற கேள்வியை இவ் வியக்கம் தவிர்க்க முனைகிறது.

(தொடரும்)

www.padippakam.com
படிப்பகம்

# முறிந்த பனை 3



திருமதி ரஜனிதிரணகம,மூன்றுவிரிவுரையாளர்களுடன் சேர்ந்துஎழுதி வெளியிட்ட "THE BROKEN PALMYRAH" (முறிந்தபனை என்னும் நூலின் தமிழாக்கத்தின் சிலபகுதிகள் 'விடுதலை' பத்திரிகையில் 01.01.1990.முதல் வெளிவந்துள்ளது.அதனை தொடர்ச்சியாக இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்.

இந்நூலை எழுதி வெளியிட்டதன் காரணமாகவே ரஜனி கொலைசெய்யப்பட்டார். யா/பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல்துறை தலைவராக இருந்த திருமதி ரஜனிதிரணகம, தமது சகோதரியான திருமதி நிர்மலாநித்தியானந்தன் போலவே புலிகள்இயக்கத்திலிருந்து முரண்பட்டு வெளியேறியவர். தமது அமைப்பிலிருந்து முரண்பட்டுவெளியேறி, விமர்சிப்பவர்களுக்கு புலிகள்வழங்கும் தண்டனை,இவருக்கு 35 ஆவது வயதிலேயே வழங்கப்பட்டது.

## மக்கள் இன்னமும் தங்கள்எதிர்ப்பினை மௌனமாகவே தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட இடங்களுக்கிடையேயான தூரங்கள் நடைமுறையில் மிகப்பெரியதாக இருந்ததால் இந்த ஏற்பாடு பேரளவிலானதாகவே இருந்தது. அத்துடன் மொத்தமாக அறிவிக்கப்பட்டிருந்த இடவசதியானது யாழ் குடாநாட்டு மக்களில் ஒருபகுதியையே அடக்கக் கூடியதாக இருந்தது. இதனால் நிலைமைகள் மோசமடையும் பட்சத்தில் மக்கள் அண்மையிலுள்ள கோயில்களுக்கும்,பாடசாலைகளுக்கும் செல்லத் தீர்மானித்தனர்.

தகவல் கொடுப்பவர்கள் என புலிகளினால் கருதப்பட்டவர்களுக்கு கடுந் தண்டனைகள் கொடுக்கப்பட்டது. புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்களையும் அதன் தொலைக்காட்சி சேவையான "நிதர்சனத்தையும்" அவதானித்ததின் மூலம் பாதுகாப்புப் படையினர் பெற்ற பெருமளவிலான தகவல்களைக் கண்டு புலிகள் ஆச்சரியமடைந்தனர். 'வீக் எண்ட்' பத்திரிகையில்,நிலைமை அறிக்கையின்படி நீண்டகால் அவதானிப்பின் மூலம் புலிகளின் சங்கேதச் சொற்கள் (Code words) உடைக்கப்பட்டதுடன் அவர்களுடைய கையெழுத்துக்களும் எந்தெந்தத் தலைவர்களுடையது என அடையாளங்கள் காணப்பட்டது. உளவாளிகளும் சுற்றிவர இருந்தார்கள். இது ஒருபுறமிருக்க பறந்து திரியும் குண்டு வீச்சு விமானங்கள் விமான ஓட்டிகளின் உரையாடல்களை எஃவ். எம்.(F.M)ஒலிபரப்புக்கள் மூலம் அவதானிப்பது பெரும்பாலான மக்களின் பொழுது போக்காக இருந்தது. விமானத் தாக்குதல்களின்போது அவதானிப்பதற்காக சிலர் பதுங்கு குழிகளினுள்ளே FM ஏரியல்களையும், பதிவு செய்யும் கருவிகளையும் வைத்திருந்தார்கள்.

பாதுகாப்புப் படையினருக்குக் கிடைத்த புலனாய்வு அறிக்கையிலிருந்து தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு அனுகூலமான சந்தர்ப்பம் கிடைத்தது. வடமராட்சியில் சனம் செறிந்த பகுதிகள், வடக்கு கடற்கரையை நோக்கி தொகுதி தொகுதியாக அமைந்திருந்தன. தொண்டமனாறு கடலேரியிலிருந்து வெளிநீட்டியிருந்த திறந்த வெளியானது, வடமராட்சியை யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரித்தது. இத்திறந்த வெளியூடான அசைவுகள் அவதானிப்பதற்கு இலகுவாக இருந்தன. புவியியல் ரீதியான காரணிகளும், பிரபாகரனின் பிரசன்னமும் இராணுவ அழிவை வடமராட்சியில் பிரயோகிக்கும்படி தூண்டின.

> புலிகள் இயக்கம் மிகமோசமான கதியிலிருந்தது. அவர்களது வாய் வீச்சு அதிகமாக இருந்தபோதும், தெற்குப்புறமாக ஸ்ரீலங்காவை நோக்கி அல்லது இந்தியாவை நோக்கிப் பறந்தோடினார்கள்.

வடமராட்சியும், எஞ்சிய வடக்கு கடற்கரையோரங்களும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதானது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் பரந்த யுத்தமுனை ஒன்றைவெளிக்காட்டியதுடன்,புலிகளின் மூலவளங்களையும் மிகமிகப் பரவலாக்கின.

வல்வெட்டித்துறையில் பிரபாகரன் இருந்தது முதலில் மறுக்கப்பட்டாலும், பின்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கேணல் விமலரட்ணாவுக்கும் புலி உறுப்பினருக்கும் இடையேநடந்த கலந்துரையாடலின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வுரையாடல் பலாலியில் 1987 யூலை மாதம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்பின்னர் நடைபெற்றது. இதன்விபரம் 27.10.87 'வீக் எண்ட்' பத்திரிகையில் நிலைமைபற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் கேணல் விமலரட்ணாவினாலும், பிரிகேடியர் கொப்பேகடுவவினாலும் செய்துமுடிக்கப்பட்டது.

> மூன்றுவரிசையாக பருத்தித்துறையிலிருந்து கிழக்குநோக்கி முன்னேறிய புலிகளுக்கு, குழுக்களை மறுசீரமைத்துக்கொள்ளவோ புதிய நிலக்கண்ணி வெடித்தடைகளை ஏற்படுத்திக்கொள்ளவோ நேரங்கிடைக்கவில்லை. புலிகள் தங்கள் வாகனங்களையும் பெருந்தொகையான ஆயுதங்களையும் விட்டுவிட்டு விரைந்து பின்வாங்கினார்கள்.

இவ்வுரையாடலிலிருந்து ஸ்ரீலங்காபடையினர், பிரபாகரன் வல்வெட்டித்துறையில் இருந்ததை மட்டுமல்லாமல் அவரது இருப்பிடம்பற்றிய சரியானபுலனாய்வு தகவல்களையும் கொண்டிருந்தார்கள் என்பதனையும் அனுமானிக்க முடிகிறது.

அவ்வாறுஇருக்கும்போது இலங்கை இராணுவத்தினர் பிரபாகரன் தப்பிச்செல்வதை ஏன் தடுக்கமுடியாது போயினர் என்றகேள்விக்கு, இராணுவத்தினர் தரைக் கண்ணிவெடிகளை அகற்றுவதில் நேரத்தைச் செலவிடவேண்டி ஏற்பட்டு விட்டதென கேணல்கூறினார்.

அந்த அறிக்கையின் பொழிப்புரை வருமாறு -
புலிகளின் முந்தைய மட்டக்களப்பு தளபதியும் அந்தஇயக்கத்தின் உயர்மட்ட உறுப்பினருமான குமரப்பாவும் சகாக்களும் பலாலியிலுள்ள இந்திய அமைதி காக்கும்படைத்தலைமையகத்தில், ஸ்ரீலங்காவின் பயங்கரவாத எதிர்ப்பு யுத்தத்தை நடத்துவதில் உயர்மட்ட அதிகாரியான கேணல் விமலரட்ணாவுடன் தேனீர்விருந்தொன்றின் போது பேசிக்கொண்டார்கள்.

உரையாடல் இருதரப்பினரிடையேயும் நடைபெற்ற சண்டைபற்றி ஆர்வமூட்டும் வகையில் அமைந்திருந்தது.

வடமராட்சி ஊடாக ஒப்பரேஷன் லிபரேஷனின்போது ஒரு பிரிகேட்டுக்கு தலைமைதாங்கிச்சென்ற கேணல் விமலரட்ணாவை புலிகளின் தலைவர் பிரபாகரனும் அந்தப்பகுதிப் பொறுப்பாளர் சூசையும் அகப்பட்டிருந்த வல்வெட்டித்துறை மீதுஏன் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை? என்றுகேட்டபோது தனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை என்றும் வல்வெட்டித்துறை படையினர் சுற்றிவளைத்தபோது தரைக் கண்ணிவெடியில் அகப்பட்ட ஒரு பகுதி வீரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைத் தடைசெய்வதற்குத் தாமதமேற்பட்டது.
அந்த இடத்தினூடாகவே புலிகளின் தலைவர் தப்பிவெளியேறினார்என்று விமலரட்ணா தெரிவித்தார்.

மற்றொரு தகவலின்படி பிரபாகரனுக்கு அடைக்கலம்தந்து உபசரித்த வல்வெட்டித்துறை வியாபாரியின் இருவீடுகளும், பிரபாகரன் வெளியேறி சிறிது நேரத்தில் குண்டுவீசி தகர்க்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

எண்ணிறந்த புலிஉறுப்பினர்கள் கிழக்குப் பக்கமாகச்சென்று பின்னர் முள்ளிவெளியூடாகத் தெற்கு நோக்கி பிரபாகரனை பாதுகாப்பாய் அழைத்துச் செல்லும் பயங்கரப்பணியில் தங்கள் உயிரைப்பறிகொடுத்தனர்.இதுகுறித்த விசனம், புலிகளின் பல்வேறு மட்டங்களில் குறிப்பிடக்கூடிய ஒழுங்கீனத்தை ஏற்படுத்தியது.

மூன்று வரிசையாக பருத்தித்துறையிலிருந்து கிழக்குநோக்கி முன்னேறிய புலிகளுக்கு, குழுக்களை மறுசீரமைத்துக் கொள்ளவோ புதிய நிலக்கண்ணி வெடித்தடைகளை ஏற்படுத்திக்கொள்ளவோ நேரங்கிடைக்கவில்லை. புலிகள் தங்கள் வாகனங்களையும் பெருந்தொகையான ஆயுதங்களையும் விட்டுவிட்டு விரைந்து பின்வாங்கினார்கள்.

வடமராட்சியை மீளவும் கைப்பற்றுவதில் கமுனு கஜபாபடைகளைச் சேர்ந்த 8000 துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அடுத்துநடந்த நிகழ்ச்சிகளால் புலிகள் திகைப்புக்குள்ளாக்கப்பட்டார்கள்.

கடந்த மூன்றுவருடகாலத்தில் இலங்கை இராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டுகளுக்கிடையே நிதானமான கட்டுப்பாட்டுடன் முன்னேறுவதற்கு மனோபலமும் பயிற்சியும் பெற்றிருந்தனர். 1983இலிருந்த ஒழுங்கீனக்கும்பல்போன்ற இராணுவமாக இருக்கவில்லை.

முன்முயற்சியும் திகைப்பூட்டும் தன்மையும் ஸ்ரீலங்காஇராணுவத்தின் பக்கமே தொடர்ந்திருந்தது. காங்கேசன்துறைக்குக்கிழக்கேயுள்ள வடக்குக் கரைகளனைத்தையும் அதன்கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. அதுஇப்போது மேற்குப்புறக் கடற்கரையோரமாகவும் தெற்கே தெல்லிப்பளை நோக்கியும் எவ்வித எதிர்ப்புமின்றி முன்னேறியது.

(தொடரும்)

★ ★ ★ ★ ★ ★ ★


ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE

| | | | |
|---|---|---|---|
| POST BAG - 5551<br>MADRAS - 600094<br>INDIA. | B.M. BOX - 1738<br>LONDON-WCIN-3XX<br>U. K. | POST FACH - 100206<br>4600 DORTMUND - 1<br>GERMANY. | |
| P. BOX 6800<br>AGINCOURT<br>ONTARIO M1S3C6<br>CANADA. | BOITE NO - 69<br>7 - RUE RACINE<br>95140 - GARGES<br>FRANCE. | POST BOKS - 115<br>GROURD HAGENEN<br>0905 - OSLO - 9<br>NORWAY. | POST BOX - 52<br>LAVERTON<br>VICTORIA - 3028<br>AUSTRALIA. |

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செய்திப்பிரிவான ஈழ மக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் ஐரோப்பிய பிரிவினால் 'புதியபார்வை' வெளியிடப்படுகிறது.


படிப்பகம்